தென்மொழி

கனித்தமிழ்
க்கியத் திங்களிதழ்

50
காசு

தமிழர் விழிப்படைக!

எத்தகையார்க் குழைததாலும், இடுகவென
ஏந்துகையிற் சோற ளிப்பர்;
அத்தகையார் நமக்கென்றும் அரசரன்று!
நாமவர்க்கும் அடிமை யன்று!
தொத்துகையால் குரங்குக்கு நீட்டுகழி
தோழனன்று! பிறரிங் நாட்டில்
வித்துகையால் விளைவெல்லாம் அவர்க்கன்று!
விழிப்படைக தமிழர் இன்றே!

—சித்திரை—



தென்மொழி
இலக்கிய இதழ்

திருப்பாதிரிப்புலியூர்.
சுவடி 1. ஓலை 3.

தி. பி. 1994
சித்திரைத்திங்கள்.
(1963–ஏப்ரல்)

●

சிறப்பாசிரியர்
புலவ, பண்டித, வித்துவ
ஞா. தேவநேயப் பாவாணர்

பொறுப்பாசிரியர்
பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்
ம. இலெ. தங்கப்பா
மு. சாத்தையா
செம்பியன்

●

உரிமை, வெளியீடு
தாமரை
உலக முதல்வி

●

அச்சகம்
மித்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்.

தனியிதழ் 50 காசு.

தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை, எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இந்திய அரசின் மொழிக் கொள்கை.

மொழி என்பது ஒருவர் கருத்தைப் பிறர் அறிந்து கொள்ளவும், பிறர்க்கு அறிவிக்கவும் ஏற்ற கருவி என்று பொதுவாகப் பொருள் பட்டாலும், சிறப்பாக அது மக்கள் வளர்ச்சி எல்லாவற்றிற்கும் அடிப்படையாக விருப்பதை மாந்தனூல், மன நூல், அறிவு நூல் முதலியவற்றைத் தெளிவாகக் கற்றவர் நன்கு உணர்வர். ஒரு மொழி, தன்னைச் சார்ந்த ஒரு மக்கள் கூட்டத்தில் எவ்வளவுக் கெவ்வளவு ஆழமாகவும் விரிவாகவும் ஊன்றியுள்ளதோ, அவ்வளவுக் கவ்வளவு அம் மக்கள் தங்கட்குத் தேவையான அறிவு, மன, நாகரிகவளர்ச்சிகளில் மேம்பாடடைவர் என்பதை உலக வரலாறு அறிந்தவர்கள் என்றும் மறுத்துப் பேசார். இக்கருத்து ஒரு தனி நாட்டின் ஒரு தனி மக்கட் கூட்டத்திற்கு மட்டுமன்றி உலக நாடுகள் எல்லாவற்றிற்குமே பொருந்துவதாகும்.

இந்திய அரசினர் கொண்ட பல தவறுன கொள்கைகளில் மொழிக் கொள்கையும் ஒன்றுகும். இவ்வுரையுள் அவர் கொண்ட மொழிக் கொள்கை மட்டுமே ஒருவாறு எடுத்து விளக்கப் பெறும்.

இந்திய நாடு பல மொழிகள் பேசும் மக்கள் வாழும் நாடாக விருப்பினும், இங்குப் பேரளவில் பேசப்படும் மொழிகள் பதின் மூன்றாகும். அவை அசாமி, ஒரியா, உருது, இந்தி, கன்னடம், காசுமீரி, குசராத்தி, தமிழ், தெலுங்கு, பஞ்சாபி, மராட்டி, மலையாளம், வங்காளம் என்பனவாம். இனி எங்கும் பேசப் பெறாததும் முது நூல் வழக்கன்றிப் புது நூல் வழக்கில் சிறிதள வும் பயிலப் பெறாததும் 44 கோடி மக்களுள் ஏறத்தாழ 500 மக்களாலேயே பேசப் பெறுவதாகக் கணக்கிடப்பட்டதுமான சமற்கிருதமும் மேற்குறித்த பதின் மூன்று மொழிகளுடன் சேர்த் துப் பதினான்கென எண்ணப் பெறும். அது அங்ஙனங் கொள் ளப் பெறுதற்கு ஒரு சார் அதன் பழைமையும் மறுசார் அது ஒரு சில ஆரிய மொழிகளின் தோற்ற மூலமாக விருப்பதுமே பொருட்டாகலாம்.

இனி இம் மொழிகளில் அசாமி, ஒரியா, உருது, இந்தி, காசுமீரி, குசராத்தி, பஞ்சாபி, வங்காளம், மராட்டி ஆகிய ஒன்பதும் வடபாலும், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் தென்பாலும் பெருவழக்குள்ளனவாகக் கொண்டு இப் பதின்மூன்றையும் சமற்கிருதத்தையும் இந்திய அரசியல் மொழிகளாக ஏற்றுள்ளனர்.

இங்குக் குறிப்பிட்ட இரு கூறு மொழிகளை ஒன்றினுள் ஒன்ற டக்கி, வடபால் வழங்கும் மொழிகள் எல்லாம் வடமொழியென் றும், தென்பால் வழங்கும் மொழிகளெல்லாம் தென்மொழியென் றும் கூறலாம்.

பேராயக் கட்சி தன்னுரிமை பெற்று ஆட்சியமைப்பை ஏற்படுத்துங்கால் சிறிது முன் விழிப்புடனிருந்திருந்தால் இவ் விருவகை வழக்காகவே ஆட்சியை நிறுவியிருக்க முடியும். அங்ஙன் நிறுவியிருப்பின் இப்பொழுதுள்ள மொழிப் போராட்ட மும் இனப் போராட்டமும் இல்லா தொழிந்திருக்கும். ஆனால் அன்று அவ்வாறு நிறுவாமற் போனமைக்குத் தலையாய காரண மாக இருந்தது, இப் பதினான்கு மொழிகளையும் அரசியல், வாழ் வியல், அறிவியல் எனும் முத்துறைகளிலும் பின்னிப் பிணைத் துக் கொண்டிருந்த ஆங்கிலமே. ஆங்கிலம் மட்டும் இந்திய

முழுமைக்கும் ஓர் ஒற்றுமை யுணர்வை ஏற்படுத்தி யிராவிடில் எக்காலத்தும் இந்திய நாடு இணைந்திருக்க ஒரு சிறு வழி தானும் ஏற்பட்டிருக்காது என்பதைத் திட்டமாகக் கூறலாம். காந்தியடிகள் விரும்பிய ஆங்கிலமகன்ற தாய்மொழியாட்சி ஏற்படாமைக்குக் காரணமும் இதுவே. இன்று நம்மிடையே அடிகள் இருந்திருப்பின் ஆங்கிலம் என்றோ அகற்றப் பெற்றிருக்கும். அவ்வாறு ஆங்கிலம் இந்நாட்டைவிட்டு என்று அகற்றப் பெறுகின்றதோ, அன்றே இவ்விந்திய நாட்டின் ஒற்றுமை குலைவுண்டு போகும் என்பது உறுதி. இந்நிலையில் அடிகளின் கருத்து பிழையானதென்று கருதி, மேனிலை யாட்சி அமைப்பாளரால் முன்னறிவாக அது விலக்கப் பெற்றது. ஆனால் சட்டிக்குத் தப்பி நெருப்பில் விழுந்ததைப்போல், ஆங்கிலத்தை அகற்றவிடாமல் ஒற்றுமையைக் கட்டிக்காக்க விரும்பிய ஆட்சியாளர், இக்கால் அவ்வொற்றுமையை மீண்டும் வலியுறுத்த வேண்டி இந்தியைப் புகுத்தத் தலைப்படுவாராயினர். இந்நிலை ஏற்பட்ட பின்னரே நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் மொழியுணர்வும் இனவுணர்வும் தலையெடுக்கத் தொடங்கின.

இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு ஆங்கிலம் பயன்படுவது போல் வளப்பமும் ஆழமும் செழிப்புமற்ற இந்தி ஒருகாலும் பயன்படாது. இந்தி மொழி, தமிழ்போல் தனித்த மொழியன்று. ஆங்கிலம்போல் கூட்டு மொழியுமன்று. அது ஒரு கலவைமொழியாகும். கூட்டு மொழியென்பது ஒரு சில அடிப்படைக் காரணம் பற்றிப் பிறமொழிச் சொற்களைக் கூட்டிக் கொண்டு பெருக்க முறுவது. கலவை மொழியென்பது எவ்வகை அடிப்படைக் காரணமுமின்றியும், பிற மொழிகள் வந்து தாமாகக் கலக்க இடந் தந்து உயிர் வாழும் ஒரு மொழியாகும். ஏதுமற்ற இந்தி மொழியை ஒற்றுமைக்காரணம் ஒன்றேபற்றி ஆங்கிலம் இருக்கும் இடத்தில் அமர்த்துவது ஆட்சியாளரின் அறியாமையேயாகும்.

இக் கொள்கைக் குழப்பங் காரணமாக, தென்பால் உள்ள மக்களின் தன்னுரிமை பறிபோகும் என்பதில் துளியும் ஐயமில்லை. இந்திய நாட்டினரில் வடபால் உள்ளவர்களிற் பெரும்பாலார் இந்தியைத் தாய் மொழியாகவோ, பேச்சு மொழியாகவோ கொண்ட காரணத்தால், தென்பால் உள்ளவர்களும் அதைக்

கற்றுத்தான் ஆகல் வேண்டும் என்று கட்டாயப் படுத்துவதும், அதனால் ஒற்றுமையை வலியுறுத்த முற்படுத்துவதும், கல்லைக் கொண்டு கடலைக் கடக்க முற்படும் அறியாமைச் செயலேயாகும்.

ஒவ்வொரு மொழிக் குடும்பத்திற்கும் தாய்மொழி இன்றி யமையாத வொன்றே யாகும். இனி அறிவியலறிவு மேம்பாட் டிற்கும், உலகத் தொடர்பிற்காகவும், ஆங்கிலத்திலும் வலிந்த ஒரு மொழி என்றும் வேண்டுவதில்லை. கன்னியாகுமரியினின்று புறப்படும் ஒருவன் சென்னை வரை போகத் தமிழையும், தில்லி வரை போக இந்தியையும், இங்கிலாந்து அமெரிக்கா போக ஆங்கிலத்தையும் உருசியா போக உருசியத்தையும், சீனு போக சீனத்தையும் கற்றுக் கொள்ள வேண்டிய தேவையில்லை. ஆங்கிலம் ஒன்று கொண்டே இவ்வுலகத்தின் எந்தவொரு பகுதிக்கும் போவதியல்வதாயிருக்க ஒரு சிற்றெல்லைக் காரணம் பற்றி இந்தி கற்றுத்தான் ஆகல் வேண்டு மென்பதில் மொழி வெறி யழுத்தத்தைத் தவிர அறிவுடைமை இருப்பதாகக் கூற முடியாது. அப்படிப்பட்ட உலகச் செலவு நிலையும் ஒவ்வொரு வருக்கும் வாய்க்கவும் வாய்க்காது. ஏதோ வொரு சில காரணங் கட்காக, ஒரு சிலர் ஒரு சில நாடுகளின், ஒரு சிலவிடங்கட்குப் போய் ஒரு சில நாட்கள் தங்கியிருந்து மீள்வதற்காக அந்நாட்டு முழு வழக்கிற்கும் காரணமாகவுள்ள அந்நாட்டு மொழியை எல்லாரும் கற்கத்தான் வேண்டுமென்பது எப்படி அறிவுடைமை யாகும்? தமிழ் நாட்டினின்று வாணிகம், போர், கல்வி முதலிய காரணங்களால் வடநாடு போய் மீளும் ஒரு சிலர்க்காக இங் குள்ளார் அனைவரும் இந்தி கற்றுக் கொள்ளத்தான் வேண்டுமா? இக்காரணமன்றி நாட்டுக்கு ஒரு பொது மொழி தேவை; அதனை எல்லாரும் கற்றே தீரல் வேண்டும் என்று கூறப் பெறுமானல், அதைவிட மடமையும் தன்னுரிமையைச் சாகடிக்கும் செயலும் வேறொன்று மிராது.

தமிழ் நாட்டு மாணவர்கள் தமிழையே படிக்கப் போதுமான வாய்ப்பில்லை; இனி அறிவியல் மொழியான ஆங்கிலத்தையும் கற்கப் போதுமான வாய்ப்பில்லை; பயிற்சியும் இல்லை. இந்நிலை

(தொடர்ச்சி 68-ஆம் பக்கம் பார்க்க)



மக்களவை

மொழிப் பெரும்புலவர் அவர்களின் ஆய்வுக் கட்டுரையைப் பன்முறை ஆழ்ந்து படித்தேன்.........எமர்சனின் தன்னுணர்வு அருமையான படைப்பு. அதன் தமிழாக்கம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. தமிழர் எழுச்சிப்பத்து, தூங்குகின்ற தமிழரைத் தட்டி எழுப்புகின்றது. 'வாழிய தென்மொழி' பாட்டாசிரியர் மட்டும் வாழ்த்தவில்லை தமிழன்பர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நெஞ்சார வாழ்த்துகின்றனர். அறிவியற் கட்டுரை எல்லாரையும் விண்வெளிக்கு அழைத்துச் செல்கின்றது. மாரி–அறவாழி அவர்களின் கதையை விரும்பிப்படித்தேன். இனி அவர் குறள் நெறிக் கதைகள் எழுதுவதைப் பெரிதும் விரும்புகின்றேன். நகை நலம் சிறந்த பகுதி. மருத்துவப் பகுதியும் வினு விடைப் பகுதியும் இன்றியமையாதன. மணிமொழி மாலையைப் போல் ஆன்ரூரின் பொன்மொழிகள் வெளியிடுக.

— குரு. சண்முகம்
உதயக்குடி.

* * *

......................அனைத்தும் வணிகமாய்
விரிந்த முறையில் விற்கும் ஏடுகள்
தெரிந்தே விளைக்கும் தீங்கினைக் களையச்
சிறந்த தென்மொழி வென்றிட வாழ்த்து!

— மா. பா. குருசாமி
கல்லுப்பட்டி.

* * *

கண்டபடி உருமாறித் தண்டமிழ்ப் போர்வையில் அறியாத மக்களை ஏமாற்றி வாழும் புல்லரின் நாடகம் நீடிக்காது. வஞ்சகப் போர்வையைக் கிழிப்போம். தீய மடமையைக் குழிதோண்டிப் புதைப்போம். தமிழையே பேச்சாக்கி மூச்சாக்கித் தமிழுக்கே உழைக்க முன்னிற்கும் தங்களைப் போல்வார்க்கு நாங்கள் உறு துணை புரிய முன்னிற்போம்.

— பொற்கோ
அண்ணாமலை நகர்.

தென்மொழி இதழ் மீண்டும் வந்தமைக்கு நான் பெரிதும் மகிழ்கின்றேன். திருக்குறள்; தொல்காப்பியம்; பத்துப்பாட்டு; எட்டுத்தொகை போன்ற ஆழ்ந்த தமிழ் நூல்களின் கருத்துக்களைத் தெளிவாகத் தந்து தென்மொழி இதழில் தமிழ்த்தாய் நடமிடுவாள் என எதிர் பார்க்கின்றோம். — **ஏ. வி. கண்ணன்.**
பெங்களூர் 21.

* * *

நல்ல தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு பணிபுரிகிறீர்கள். சீரிய தொண்டு. ஆசிரியர் குறிப்பு நெஞ்சைத் தொடுகின்றது. 'தமிழர் உழவு செய்க'; 'வாழிய தென்மொழி' ஆகிய இரு பாடல்களும் செந்தமிழ்க் குரலெழுப்பி முழங்குகின்றன. பாடல்கள் கருத்துப் பொதிந்தவை. அழகியவை. இதழ்தோறும் மலர வேண்டும். தங்களிதழ் தமிழர் வாழும் ஊரெங்கும் குன்றா ஒளி வீசித் திகழவேண்டும்.

— **அ. சாகுல் அமீது**
சென்னை 14.

* * *

தென்மொழி எனுந் தனித் தமிழ்த் திங்கள் வெளியீட்டைக் காணும் பேறு கிடைத்தது. மொழிப் பேரறிஞரைச் சிறப்பாசிரியராய்ப் பெற்றிருக்கும் அதன் சிறப்பை விதந்து கூறலும் வேண்டுமோ? 'தமிழர் எழுச்சி பத்து' பாதுகாக்கப்பட வேண்டிய பாடற் சொத்து. பிறவும் சிறப்புடன் திகழ்ந்தன. தென்மொழி வாழ்க! வளர்க! — **எழில் முதல்வன்**
சென்னை 5.

* * *

காரிருள் கப்பிக் கிடந்த தமிழர் நெஞ்சங்களில் பேரொளியுமிழ்ந்து பெருந் தொண்டாற்றிய தென்மொழி மீண்டும் வெளிவந்தது கண்டு கழிபேருவகையுற்றேன். தென்மொழியின் எழுச்சியால் என்னுள்ளத்தின் அடியில் நீறுபூத்துக் கிடந்த தமிழ்க் கனல் இன்று கனிந்து சுடர் பரப்பி நிற்பதனை யான் உணர்கிறேன். மீண்டும் தென்மொழி நலிந்துவிட யான் இடங்கொடேன். வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் உதவுவேன்.

மெய்த் தமிழில் தாளிகையா? வேடிக்கை! என்றுரைக்கும்
பித்தர் முக மூடியினைப் பிய்த்தவர் சொல்-பொய்த்திடவே
பன்மொழிகள் வல்ல தமிழ்ப் பாவாணர் ஈங்களித்த
தென்மொழிநீ வாழ்க சிறந்து!

— **மகிபை. பாவிசைக்கோ**
சென்னை 13.

* * *

தென்மொழி கண்டு மகிழ்வுற்றேம். தனித்தமிழ்க் கொரு நல்லிதழ் இல்லையே என ஏக்கமுற்றிருந்த தூய தமிழன்பர்க்கு *முக்கனியின் சாருய்; மும்மலர் மணமாய்; முத்தமிழ் முழங்கவரும்* தென்மொழி செங்கரும்பு போல் இனித்து நிற்கும்! முதுபெரும் புலவர்களின் ஆழமான தமிழ்க் கருத்துக் கருவூலமாய் வரும் *மொழி இதழ் வளர்க! வெல்க!* — **அண்ணு குழற்கோமான்**
திருவள்ளுவர் சங்கம்
பெங்களூர் 21.

* * *

தென்றலின் தண்மை உண்டு; தென்னவர் மறமும் உண்டு;
கன்னலின் இனிமை உண்டு; கார்முகில் அளியும் உண்டால்
இன்றமிழ் இன்பம் ஈந்தே யாமெலாம் மகிழவந்த
தென்மொழி ஏட்டில் கண்டேன்! திகழிதழ் வளர்க! வாழ்க!

புலவர். ச. **அருணன்**
புதுவை.

* * *

தென்மொழியே! நீ வாழ்க! தென்றமிழர் தாயே!
திசையறியாக் கப்பலென உன் மக்கள் ஆனேம்!
புன்மையினை நீயடையக் கண்டு குரு டானேம்;
பொருப்புநிகர் தோளிருந்தும் மனவலியில் தாழ்ந்தோம்;
உன்னெழிலை அழிக்கவரும் தெவ்வர்தமை அறிந்தும்
உணர்விகந்து மறஞ்செறிய உறுத்தெழுந்தோ மில்லை;
அன்னையளே! தென்மொழியே! பழி தவிர்க்க எழுந்தாய்
ஆற்றலினை அருளுக நீ. உனைக்காக்க எழுவோம்!

புலவர். **அ. நாமதேவன்**
கிழக்குத் தெரு. பாகூர்.

... பாவாணர் அவர்களின் தென்மொழி ஆய்வும், தங்கப்பா அவர்களின் தங்கப் பாவும், மு. சா. அவர்களின் சூளுரை முழக்கமும், தமிழர் எழுச்சிப் பத்தாம் மாணிக்கப் பாடலும் பைந்தமிழ் விருந்தாகி அமைந்துள்ளன. தனித்தமிழில் 'அறிவியலை' எழுத முடியுமா? என்று வினவுவோர்க்கு 'விண்வெளிச் செலவு' அறைகொடுத்து நிறைவூட்டுகின்றது. 'தன்னுணர்வு' அறிவின் ஆர்ப்பொலி; 'நகை நலம்' சுவையின் வைப்பு. 'உறக்கம்' உள்ளுணர்வைக் கிளப்புகின்றது. அனைத்தும் அருமை! அருமை!! அருமை!!!

— குறிஞ்சிக் குமரன்
ஈப்போ. மலைநாடு.

தமிழ் மொழியின் சொற்சிறப்பு.

நுண் பொருள் வேறுபாடு.

அறைதல் — ஓங்கிப் பேசுதல், வன்மையாகச் சொல்லுதல்
இயம்புதல் — இனிமையாகச் சொல்லுதல், இசைக்கருவி யியக்கிச் சொல்லுதல்.
இசைத்தல் — கோவையாகச் சொல்லுதல்.
உரைத்தல் — நூலுக்கு உரை கூறுதல், விளக்கிச்சொல்லுதல்
கூறுதல் — பாகுபடுத்திச் சொல்லுதல்.
சாற்றுதல் — பலரறிய நல்லுரை கூறுதல்.
நவிலுதல் — நாவினால் ஒலித்துப் பயிலுதல்.
நுதலுதல் — சொல்லித் தொடங்குதல்.
நுவலுதல் — நூலுரைத்தல், நுண் பொருள் கூறுதல்.
பகர்தல் — பண்டங்களின் விலை கூறுதல்.
பறைதல் — உரத்துச் சொல்லுதல்.
பன்னுதல் — பணிக்காய் (விவரமாய்)ச் சொல்லுதல்.
புகலுதல் — விரும்பிச் சொல்லுதல்.
புலம்புதல் — தனிமையிற் சொல்லுதல்.
பேசுதல் — ஒரு மொழியிற் சொல்லுதல்.
மாறுதல் — திருப்பிச் சொல்லுதல், மறுமொழி கூறுதல்.
மொழிதல் — சொற்களை நன்றாய்ப் பலுக்கிச் சொல்லுதல்.

— ஞா. தே.

தமிழ் தனித்தியங்குமா?

—○—

தமிழ் வரலாறு தவறாய் எழுதப்பட்டிருப்பதாலும் அதன் உண்மையியல்பு தலைமைத் தமிழ்ப் பேராசிரியன்மாராலும் அறியப்படாதிருப்பதாலும், தமிழ் தவிர ஏனை மொழிகளெல்லாம் பிறமொழிக் கலப்புற்றிருப்பதனாலும், தமிழிலும் பிற மொழிச் சொற்கள் வலிந்து புகுத்தப்பட்டிருப்பதனாலும், பல தென் சொற்கள் தவறாக வட சொற்களெனக் கருதப்படுவதாலும், தமிழ் தனித்தியங்குமா என்னுங் கேள்வி அறியார் வாயிலும் அறிந்த பகைவர் வாயிலும் நீண்ட நாளாயிருந்து வருகின்றது.

சென்ற நூற்றாண்டில், கழக (சங்க) நூற்கல்வியும் தனித்தமிழுணர்ச்சியும் மறைமலையடிகள் தனித் தமிழ்த் தொண்டும் இல்லாத காலத்தில், ஆங்கில நாட்டினின்று இங்கு வந்துதென் பாண்டி நாட்டிற் குடிபுகுந்து அரை நூற்றாண்டாகத் தமிழும் திரவிடமுமான தென் மொழிகளை யாய்ந்து தென்மொழி யொப்பியலிலக்கணங் கண்ட மறைத்திருக் கால்டுவெல் கண்காணியார், தமிழின் தென்மையையும் முன்மையையும் தாய்மையையும் தூய்மையையும் உள்ளவாறுணராவிடினும், "தமிழ் வட மொழித் துணையின்றித் தனித்து வழங்குதல் மட்டுமன்றித் தழைத்தோங்குதலுங் கூடும்" என்று தேற்றம்படக் கூறியுள்ளார். அங்ஙனங்கூறி முக்கால் நூற்றாண்டிற்கு மேலாகியும் அவர்



மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

காலத்தின்பின் மொழியாராய்ச்சி எத்துணையோ முன்னேறி யிருந்தும், இன்னும் அவர் கூற்றில் ஐயுறுவதும் ஆய்ந்து உண்மைகாண மறுப்பதும், தமிழை வேண்டாத் தன்மையையே விளக்குகின்றது.

குமரிக் கண்ட முழுக்கினாலும் பண்டைத் தமிழிலக்கிய அழிவினாலும் எத்துணையோ உலக வழக்குச் சொற்களும் செய்யுள் வழக்குச் சொற்களும் இறந்துபட்டிருந்தும், இன்னும் தமிழைத் தனி மொழியாய் வளர்க்கக்கூடிய பல்லாயிரச் சொற்களும் பற்பல சொற்கருவிகளும் தமிழில் இருந்தே வருகின்றன. வழக்கற்ற தமிழ்ச் சொற்களை வழக்காற்றுப்படுத்துவதும் இக் காலத்திற்கு வேண்டிய புதுச் சொற்களை புனைந்து கொள்வது மாகிய இரு வழிகளைக் கையாளின், தமிழ் தனித்தியங்க எள்ளளவுந் தடையில்லை.

1. வழக்கற்ற தென் சொற்கள்

வடமொழி தேவமொழி யென்னும் ஏமாற்றையும் பண்டைத் தமிழ் வேந்தரின் பேதைமையையும் துணைக்கொண்டு, ஆயிரக் கணக்கான வட சொற்கள் தமிழில் வேண்டாது புகுத்தப்பட்ட தன் விளைவாக அவற்றிற்கு நேரான விழுமிய தென் சொற்கள் சிறிதும் பெரிதும் முற்றும் வழக்கு வீழ்த்தப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டு:

வடசொல்	தென்சொல்
அன்னம்	எகின், ஓதிமம்
ஆன்மா	ஆதன், உறவி, புலம்பன்
ஆனந்தம், குதூகலம், சந்தோசம்	உவகை, களிப்பு, மகிழ்ச்சி
சகுனம்	புள்
சத்தியம், நிசம், வாஸ்தவம்	உண்மை, வாய்மை, மெய்(ம்மை)
சீரணம்	செரிமானம்
சுத்தம்	துப்புரவு
தந்திரம்	வலக்காரம்
திருப்தி	பொந்திகை

பிதிரார்ச்சிதம்	முதுசொம்
மேகம்	முகில், கார், கொண்டல்
லாபம்	ஊதியம்
நட்டம்	இழப்பு
மைத்துனன்	அளியன்
வருசம்	ஆண்டு
ஸ்திரீ புருஷர்	ஆடவர், பெண்டிர்

இங்குக் குறிக்கப்பட்ட வட சொற்கள் விளங்குதற் பொருட்டுப் பெரும்பாலும் தற்பவ வடிவிற் காட்டப்பட்டுள்ளன.

நகைச் சுவையை ஹாஸ்ய ரசம் என்பதும், அவையைச் சதஸ் என்பதும், பணிவிடையைச் சிசுருஷை என்பதும், திருமணத்தைப் பரிணயம் என்பதும், குடமூக்கு (குடந்தை), குரங்காடுதுறை, சிற்றம்பலம் (தில்லை), பழமலை (முதுகுன்றம்), மயிலாடுதுறை, மறைக்காடு முதலிய செந்தமிழ் நாட்டூர்த்தனித் தமிழ்ப் பெயர்களை, முறையே, கும்பகோணம், கபிஸ்தலம், சிதம்பரம், விருத்தாசலம், மாயூரம், வேதாரணியம் என வட சொற்களாய் ஏற்கெனவே மாற்றியிருப்பதும், இத்தகைய இழி செயலை இன்றும் கையாள்வதும், தென்னாட்டு வடமொழியாளரின் வரையிறந்த வடமொழி வெறியையன்றி வேறெதைக் காட்டும்?

இன்று தமிழில் வழங்கும் வட சொற்கள் தமிழிற்கு வேண்டியவுமல்ல; தமிழர் விரும்பியவுமல்ல. உடம்பிற்குட் புகுந்து அதனுக்கு ஊறுசெய்யும் நச்சுப் புழுக்களையும் இன்னாப் பொருட்களையும் அதன் நலத்தின் பொருட்டு நீக்குவது போன்றே, வேண்டாவடசொற்களையும் தமிழினின்று விலக்குதல் வேண்டும். இதனைத் தடுப்பவர் புறப் பகைவரும் உட் பகைவருமாயே யிருத்தல் வேண்டும்.

வடசொற்கட்கு இங்குக் கூறியது பிற சொற்கட்கும் ஒக்கும்.

2. புதுச் சொற்புனைவு

பல பொருள்கள் பல் வகையில் வேறுபட்டிருப்பினும், அவற்றிற்கெல்லாம் பொதுவாக ஒரு தன்மை காணக்கிடக்கின்றது. உயிரிகள் ஒன்று இன்னொன்றை அல்லது பலவற்றைப் பிறப்பிப்பது போன்றே கருத்துக்களும் ஒன்று இன்னொன்றை அல்லது பலவற்றைத் தோற்றுவிக்கின்றன. இவ்வீருண்மை

களையும் கண்ட குமரிக் கண்டத் தமிழர், ஓரடியினின்றே ஈற்று வேறுபாட்டாற் பல்வேறு சொற்களைத் திரித்து, அவற்றாற் பற்பல பொருள்களையுங் கருத்துக்களையுங் குறிப்பித்திருக் கின்றனர்.

எ. டு:

வெள்

வெள்ளென	வெள்கு-	வெளி	வெளு	வெளேல்-
வெள்ளை	வெட்கு	வெளிப்பு	வெளுப்பு	வெளேர்
வெள்ளம்		வெளிவு	வெளுவை	
வெள்ளி		வெளிச்சம்		
வெள்ளில்		வெளிச்சி.		
வெள்ளந்தி		வெளிச்சை		
வெள்ளென்காட்டி		வெளில்		
(வெள்ளனக்காட்டி)		வெளிறு		

வெள் – விள் – விள (வெள்ளைத் தோட்டுக் கனி) –
விளம், விளா, விளவு, விளாத்தி
விளர்
விளர்ப்பு (வெளுப்பு)
விள் – வில் – வில்வு, வில்வம், வில்லம் (கூவிளம்)
விள் – விள – விளங்கு, விளக்கு, விளக்கம்.
வெள் – வெண் – வெண்பு (வெண்ணிலம், Plain)
வெள் - வெறு வெறு – வெறி -
வெற்று வெறிப்பு(முகில் நீங்கி வானம் வெறியாதல்)
(வெள்ளிலை – வெற்றிலை) வெறிச்சு
(வெண்மை = வெறுமை)
வெறு – வறு வறு – வறிது
வறுமை
வெள் – வெட்டு (மின்) வெட்டு – வெட்டி (கூலியில்லா வெறுமை வேலை)
வெட்டம் (வெளிச்சம்)
வெட்ட (தெளிவான)
வெட்டை (வெளி, வெறுமை, பயனின்மை)

இங்குக் காட்டப்பட்டுள்ள சொற்களெல்லாம், வெண்ணி றத்தைக் குறிக்கும் **வெள்** என்னும் ஒரேயடியினின்று பிறந்து, வெண்மைக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு காட்சிப் பொருள்களையுங் கருத்துப் பொருள்களையுங் குறிப்பன வாகும். இவ்வடியினின்று பிறந்த வேறு சில சொற்களுமுள. அவை விரிவஞ்சி இங்கு விடப்பட்டுள.

சில பொருள்கட்குப் பிறவற்றிற்கில்லாத சிறப்பியல்புண்டு. அதனையும் நம் முன்னோர்கண்டு, அதற்கேற்பப் பெயர்களை அமைத்திருக்கின்றனர்.

எ. டு: வாழை (அடி வழ வழவென்றிருப்பது).

இங்ஙனமே பிற மொழியாளரும் தத்தம் மொழியிற் சொற் களை ஆக்கியிருக்கின்றனர். ஆகவே, ஆங்கிலக் குறியீடுகளின் வேர்ப் பொருளையோ அவற்றாற் குறிக்கப்படும் பொருள்களின் சிறப்பியல்பையோ அறிந்து கொள்ளின், அறிவியலும் கம்மியமும் பற்றிய எல்லாச் சொற்களையும் எளிதாய்த் தமிழில் அமைத்துக் கொள்ளலாம் சொற்றிரிப்பிற்கேற்ற ஈறுகள் தமிழில் ஏராளமாகவுள்ளன. தொழிற் பெயரீறுகள் மட்டும் தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், பாடு, காடு, அரவு, ஆனை, மை, து, இல், ஆல், அனை, அனம், இனம், அணம், இணம், அடம், இடம், அரம், இதம், முதலியன வாக முப்பதிற்கு மேலுள்ளன. இவற்றொடு, வினை முதலீறுகள் செயப்படு பொருளீறுகள் முதலிய ஈற்று வகைகளையும், குறுமைப் பொருள், பெருமைப் பொருள் முதலியனபற்றிய முன் பின் ஒட்டு வகைகளையும், சேர்ப்பின் எத்துணையோ பலவாகும். இலத்தீன் கிரேக்கம் முதலிய பல மொழிகளினின்று ஆங்கிலம் கடன் கொண்டுள்ள ஈறுகளையும் ஒட்டுக்களையும் ஒத்த சொல்லு றுப்பு வளம் தமிழ் ஒன்றிலேயே இயல்பாக அமைந்து கிடக் கின்றது.

Electricity என்னும் ஆங்கிலச் சொல், அம்பர் என்னும் நறுமணப் பொருளைக் குறிக்கும் electron என்ற கிரேக்கச் சொல்லினின்றும் பிறந்தது. அம்பர் என்பது தமிழில் ஓர்க்கோலை எனவும் பெறும். 12-ஆம் நூற்றாண்டினதான அடியார்க்கு

நல்லாருரையில் அம்பர் என்னுஞ் சொல் வந்திருத்தலால், அதையும் தென் சொல்லெனக் கொள்ள இடமுண்டு. மின்னற்றலைக் குறித்தற்கு அம்பர் என்னுஞ் சொல்லினின்று **ஆம்பரியம்** என்றொரு சொல்லைத் திரித்துள்ளனர் புதுச்சேரி வாணர். சென்னை நாட்டுத் தமிழில் மின்சாரம் என்னுஞ் சொல் ஏற்கெனவே புனையப் பெற்றுளது. அதை மின்(னம்) என்றும் மாற்றிக் கொள்ளலாம்.

Radio என்னும் ஆங்கிலச் சொல், radius என்னும் இலத்தின் சொல்லினின்று திரிந்தது. இலத்தின் பொருள், தண்டு, ஆரை, கதிர் என்பன. கதிர் என்னும் சொல்லினின்று **கதிரம்** அல்லது **கதிரியம்** என்றொரு சொல்லை நாம் திரித்துக் கொள்ளலாம்.

சில பொருள்களின் அல்லது கலை முறைகளின் பெயர், அவற்றைக் கண்டு பிடித்த ஆட்பெயரால் அல்லது இடப் பெயரால் அமைந்துள்ளன. அவற்றை அப்படியே வரிபெயர்த்து வைத்துக் கொள்ளலாம்.

எ. டு:

Galvanism என்னும் மின்னுக்கமுறை கால்வனி (Galvani) என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

Galvanization = **கால்வனித்தல்**. Galvanism **கால்வனியம்**. Bauxite என்னும் மண் வகை பிரான்சு நாட்டில் பாக்கசு (Baux) என்னும் இடத்திற் கண்டு பிடிக்கப்பட்டது. அதைப் பாக்கசி என்று வரி பெயர்த்துக் கொள்ளலாம்.

Chemistry என்னும் ஆங்கிலச் சொல், Alckemy என்பதினின்று திரிந்தது. இது Al-kimia என்னும் அரபிச் சொல்லின் திரிபு. Al = the (அந்த என்று பொருள்படும் முன்னொட்டு); Kimia என்பது Khemia என்பதன் திரிபு. இது எகிப்து (Egypt) நாட்டுப் பெயரின் கிரேக்க வடிவம். ஆகவே, Chemistry என்பதைக் கெமியம் என்று சொல்லலாம்.

Chemist = கெமியன், கெமியர்
Chemical = கெமிய.

சில பொருட் பெயர்கள் அளவு பற்றி அமைந்துள்ளன. Duoderum என்பது பன்னிரண்டு என்னும் இலத்தீன் எண்ணுப் பெயர். அது ஆங்கிலத்தில் பன்னிரு விரல் (அங்குலம்) அள வுள்ள சிறு குடற் பகுதியைக் குறிக்கின்றது. இதைப் **பன்னீரம்** என்று மொழி பெயர்க்கலாம்.

Furlong என்னும் ஆங்கிலச் சொல் படைச்சால் நீளம் என்னும் பொருளது. fur = furrow (படைச்சால்). படைச் சால் என்பது அணைப்பு என்னும் சொல்லப்படும். ஆகவே, furlong என்பதைப் **படைச்சால்** என்றோ, **அணைப்பு** என்றோ, **சானீளம்** என்றோ மொழி பெயர்க்கலாம்.

சில பெயர்கள் உவமையாகு பெயராயுள்ளன. Bacterium என்னும் ஆங்கிலச் சொல் சிறு குச்சுப்போல் தோன்றும் ஒரு வகை நுண் புழுவின் பெயர். இது குச்சு என்று பொருள்படும் baktron என்னும் கிரேக்கச் சொல்லின் குறுமைப் பொருள் வடிவான bakterion என்பதன் திரிபு. இல் என்பது தமிழில் ஒரு குறுமைப் பொருட் பின்னொட்டு (diminutive suffix).

எ. டு: தொட்டி – தொட்டில் = சிறு தொட்டி
புட்டி – புட்டில் = சிறு புட்டி

குச்சு என்பதனொடு இப்பின்னொட்டைச் சேர்ப்பின், bacterium என்பதற்கு நேரான **குச்சில்** என்னும் தமிழ்ச்சொல் ஆம். சிறு வீட்டைக் குறிக்கும் குச்சில் என்பது குற்றில் என்பதன் கொச்சைத் திரிபு. சிலபெயர்கள் பன்மடியாகு பெயர்களாயுள் ளன.

Mail என்னும் ஆங்கிலச்சொல் பை என்னும் அடிப்படைப் பொருளது. அது பின்பு, முறையே, பைக்குள் இடும் கடிதங் களையும் அவற்றைக் கொண்டு செல்லும் புகை வண்டியையும் குறித்தது. ஆகவே, Mail என்பதை **அஞ்சல்** அல்லது **அஞ்சலை** என்று குறிக்கலாம்.

எல்லாச் சொற்களையும் வேர்ப்பொருள் பற்றியே மொழி பெயர்க்க வேண்டியதில்லை. பொருள்களின் சிறப்பியல்பு நோக்கி அதற்கேற்ப ஒரு பெயரிடலாம். இம்முறையிலேயே, train என்பதைப் புகைவிடும் சிறப்பியல்பு பற்றிப் புகை வண்டி எனக் குறித்தனர் தமிழ்ப் பொதுமக்கள். Train என்னும் ஆங்கிலச் சொல் இழு (draw) என்று பொருள்படும் trab என்னும் இலத்தீன் முதனிலையினின்று திரிந்தது. Cycle-ஐ மிதி வண்டி என்பர் நெல்லை நாட்டார். அதை ஈருருளி என்னத் தேவையில்லை.

பண்டை நாட்களில் அயல் நாடுகளினின்று வந்த எல்லாப் பொருள்கட்கும், அவற்றின் சிறப்பியல்பு பற்றித் தூய தென் சொற் பெயர்களை இட்டிருக்கின்றனர் பண்பட்ட பழந் தமிழ்ப் பொதுமக்கள். கரும்பு சாவித் தீவினின்றும், புகையிலையும் உருளைக் கிழங்கும் அமெரிக்க நாட்டினின்றும், வான்கோழி துருக்கி நாட்டினின்றும் வந்தவை. அமெரிக்கத் தென்னாட்டுச் சொற்களின் திரிபான tabaco (E. tobacco), Patata (E. potato) என்னும் இசுப்பானியச் (Spanish) சொற்களைத் தமிழ் ஏற்றுக் கொள்ளவில்லை. இம்மொழியுணர்ச்சி பிற்காலத்தில் ஆரியத்தாற்கெட்டது.

சில சொற்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அடிப்பொருளும் வழிப் பொருளும் ஒத்துள்ள. Pen என்னும் ஆங்கிலச் சொல், தூவு (feather) என்று பொருள்படும் Penna என்னும் இலத்தீன் சொற்றிரிபு. தூவல் என்னும் தமிழ்ச் சொல்லும் அத்தகையதே.

ஆங்கிலச் சொற்களை மொழி பெயர்க்கும்போது வண்ணனை (descriptive) முறையைக் கையாளக்கூடாது. Collector என்பதைத் தண்டலாளர் என்றே மொழி பெயர்த்தல் வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் என்று குறிப்பின், Collector என்பதையும் District Administrative Head அல்லது District Chief Administrator என்று மாற்றல் வேண்டும். அது பொருந்தாமை காண்க. காட்சியும் கருத்துமாகிய இருவகைப் பொருள்கட்கும், சொற்கள் ஒரு மருங்கு காரணக்குறியாய் இருந்தாற் போதும்.

இத்தகைய முறைகளைக் கையாளின், எல்லா ஆங்கிலக் குறியீடுகளையும் தமிழில் மொழி பெயர்த்து விடலாம். ஆங்கிலக் குறியீடுகளெல்லாம் மிக எளிய முறையில் அமைந்துள்ளன. தமிழர்க்கு வேண்டுவது தமிழ்ப்பற்று ஒன்றே.

*

ஊமைத் தமிழர்

நாடும் வடக்கென்னும் நச்சரவால் பைந்தமிழ்க்குக்
கேடுபல சூழ்ந்தும் கிளர்ந்தெழார் – மூடுகண்ணர்
தாமுண்டு தத்தம் வயிறுண்டு வாயுண்டென்(று)
ஊமையராய் வாழ்வார் உளர்.

அறிவில் சிறந்தென்? அரும்பலநூல் யாத்தென்?
செறிபொருளால் வாழ்வு செழித்தென்? - பறிபடுநம்
தாயுரிமை கண்டும் தலைதிருப்பார்; தாம்வாழ்வார்
நாயினுங்கீ ழென்று நவில்.

இடமோ பறிபோம்? இரும்புகழோ மாயும்?
கெடினென்? இவையெலாம் கேடோ? – கொடிதாய்த்
தமிழ்க்குவருங் கேடு தமக்கதுவென் றெண்ணா(து)
அமிழ்ந் திருப்ப தென்ன அறிவு?

பட்டமும் வாய்க்கும் பரிசும் புறமதிப்பும்
கெட்டுவிடு மென்று கிளர்நடுக்கோ? – கெட்டால்என்?
செந்தமிழ்க்கு வாழ்ந்திருந்தார் செத்தார் தமிழ்க்கென்றால்
இந்தப் புகழ்போது மே!

உள்ளத்தால் ஆய்வால் உணர்ந்துதெளி வுண்மைதனை
விள்ளத்தான் நெஞ்சம் விதிர்ப்புறல்ஏன்? – கள்வனையே
கள்வனென்று சொல்லக் கனிவென்ன? கூச்சென்ன?
பிள்ளைமனம் கோழைஎனப் பேசு!

ஆற்றல் இலையா? அறிவிலையா? அன்றிங்குச்
சோற்றுக் கிலையா? துணிக்கிலையா? – தேற்றற்(கு)
ஏனவில்லை இவ்வா றிமைமூட? நெஞ்சில்
துணிவில்லை என்றுநீ சொல்!

வைதானை நேர்நின்று வையத் திறமின்றிப்
பைய மனைக்குனின்று பாய்வார்போல் – பைந்தமிழைத்
தாக்குவார்க்கு நேர்மாற்றம் சாற்றமல் ஏடுபல
ஆக்குவதால் என்னபயன் ஆம்?

எழுக தமிழ்நெஞ்சம்! ஏந்துக போர்ச்சங்கம்!
முழுதும் தமிழ்க்கே முனைக – பழுதஞ்சி
ஒற்றைக்கால் மண்மீதும் ஒற்றைக்கால் நீரிலுமேல்
எற்றைக்கோ நாம்நீந்து வோம்?

ம. இலெ. தங்கப்பா.

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

நூற்சுருக்கம்

தன்னுணர்வு.

'எதை யெண்ணித் தூய்மையான வலிந்த ஆற்றலோடு அன்பு காட்டுகின்றோமோ, அது நம் கைகளில் தானே வந்து விழுகின்றது. ஆனால் புலன் வேட்கையில் மூழ்கி மூழ்கி நம் ஆற்றலைச் சிதைத்துக் கொள்கின்றோம்' என்று ஒரு மெய்யறிஞர் கூறியுள்ளதை நினைவூட்டுகின்றேன்.

குழம்பிப்போய் உண்மை உருவற்று, விளக்கெண்ணெயில் வீழ்ந்த வெண்டைக் காய்போல், கொழ கொழக்கும் இந்தக் காலத்தின் முறையற்ற வினைப்பாடுகளை, நாம் உண்மையான மனவாற்றலைக் கொண்டு எதிர்ப்பதுதான் சரியான வழி. போலி நட்பையும், பொய் வணக்கங்களையும், இரக்கமின்றி வெட்டி யெறி. தாங்களும் ஏமாந்துகொண்டு, பிறரையும் ஏமாற்றிக் கொண்டு, உன்னையும் ஏமாற்ற வரும் உன் உறவினர்கள், நண்பர்கள்தம் விருப்பப்படி நடவாதே. அவர்களை உன் முன் நிறுத்திப் பின் வருமாறு உரத்த குரலொடு அழுத்தமாகக் கூறி விடு. ''ஏ! தந்தை தாயரே! ஏ! மனைவி மக்களே! ஏ! உடன் பிறந்தவனே! ஏ! நண்பனே! நான் இதுவரை இவ்வுலகத்தின் நடைமுறைகளுக்கு ஒத்து உங்களோடு ஒன்றி நடந்துவந்தேன். ஆனால் இது முதல் நான் மெய்ப் பொருளின் உட்கிடையாகி விட்டேன். அந்த மெய்ப் பொருளின் உண்மை ஏற்பாடுகட்கு மாறாக நான் வேறெவர்க்கும் தலை வணங்கேன். எனக்கு இனிப் போலிச் சமயத்தின் ஒழுகலாறுகள் வேண்டாம். உண்மை அறிவுதான் வேண்டும். உங்கள் பழக்க வழக்கங்களை நான் இனி ஒப்பேன். என் உள்ளம் கூறுகின்ற மெய்யான கட்டளைகட்கே நான் இசைந்து நடப்பேன். நீங்கள் என்மேல் அன்பு காட்டினால் அந்த அன்புக்கும் என்னை உரியவனாக்கிக்

கொள்வேன். என் விருப்பு வெறுப்புகளை உங்களிடமும் வேறு எவரிடமும் ஒளிக்கப் போவதில்லை. என் உள்ளத்தையே வாயாகக் கொண்டு சொற்களைத் துணிவுடன் யார் மாட்டும் உதிர்ப்பேன். உங்களிடம் சால்பு இருந்தால் உங்களை நான் விரும்புவேன். இல்லாவிட்டால் வெளிக்கு மட்டும் உங்களை விரும்பி மதிப்பதுபோல், பொய்யாக நடித்து உங்கட்கும், எனக்கும் ஏமாற்றத்தைத் தேடித் தரேன். நீங்களும் நல்ல நெறிகளில் நடக்க விரும்புவதாக என்னிடம் கூறுவீராகுல், உங்களுக்குரிய கூட்டாளிகளை நீங்கள் தேடிக் கொள்ளுங்கள். நானும் எனக்குற்றவர்களைத் தேடிக் கொள்வேன். இவ்வளவும் தலைச் செருக்கோடும், அறிவுத் தருக்கோடும் கூறுவதாக நினைக்க வேண்டாம். அடக்கம் வழிந்தோடும் தூய்மையான உண்மை உள்ள ஆற்றலோடு பேசுகின்றேன். பொய்யிடம் நெடுநாள் பழகிவிட்டதாலேயே, நாம் அதனுடன் ஒன்றிப் போய்விடக்கூடாது. இறுதிக் காலத்திலாவது அறிந்துகொண்ட மெய்ம்மைகளைப் பின்பற்றி நடப்பதால் உங்கட்கும் எனக்கும், மற்றெவர்க்கும் நன்மையே காத்திருக்கின்றது. உயிர் அடையும் ஊதியமும் அதனுள் பொதிந்துள்ளது. இன்றைக்கு நான் கூறுகின்றவை யெல்லாம் கடுமையாகத் தோன்றலாம். ஆனுல் விரைவில் உங்கள் போலி அடக்கத்துக்கும் என்னுடைய உண்மையான கடுப்பிற்கும் வேற்றுமைகளை அறிந்து கொள்வீர்கள். அதனுல் இறுதியில் கைவருவது நன்மை ஒன்றே''

இப்படிக் கூறுவதால் அவர் தம் உள்ளம் நோகலாம். அவர்கள் நம் மேல் வைத்த நம்பிக்கை சாம்பிப் போகலாம். உண்மைதான்: ஆனுல் அவர்கட்கு மனம் நோகாமலிருப்பதற் காக நம் உண்மையான உள்ளத்தின் தன்னுணர்வையும், அதன் பேராற்றலையும், அதன் பெரும் பயனையும் நாம் இழந்து விட முடியாது. அதுவுமன்றி மெய்த் தனிப்பொருள் இயங்கு முறைப்படி, அவர்கள் எல்லாரும் உண்மை வாயிலை வலிந்து தட்டித் தட்டி அதன் கதவைத் திறக்கக் கெஞ்சும் நேரம் ஒன்று வந்தே தீரும். அப்பொழுது அவர் தாமும் நாம் மேலே கூறியதை ஒப்புக்கொண்டு, அதையே அவரைச் சார்ந்த மற்ற வர்க்கும் கூறத் தயங்கமாட்டார்கள்.

இவ்வகையால் நாம் உலகத்தார்க்குச் செய்யும் கடமைகள் என்ற கரண முறைப்பாடுகள் தவிர்ந்து போகலாம். ஆனல் அந்த வகைகளின் முடிவிலும் நாம் பெறப்போவது நம் உள்ள ஆற்றலைப் 'பேணி நடக்கும் முறைதான். அப்படிச் சுற்றிக் கொண்டு வர விரும்புவர்களும் அவ்வாறே வரட்டும்!

மற்றவர்க்காக வன்றித் தனக்குத் தானே வலிந்து பின் பற்றத் தக்க ஒரு பேராற்றலில் நம்பிக்கை வையுங்கள். அந்த நம்பிக்கைகொண்ட உள்ளம் எஃகுப்போல் நிலைத்து நிற்கட்டும்! அங்கு உண்மையே சூழட்டும்! அதன் அறிவு தெளிவுற்றுப் பொலியட்டும்! அத்தகையவன் தனக்குத் தானுகவும், தானே மக்கள் கூட்டமாகவும், தானே அரசனுகவும், இருக்கவேண்டி யிருக்கும்.

இந்தக் காலத்தில் உள்ள வாகு போக்கற்ற மக்கள் கூட் டத்தின் கோணல் மாணலான செய்கைக் குழப்பங்களை ஊன்றிப் பார்ப்பவனுக்கு நாம் கூறுவது எத்தகைய சிறந்த வழி என்று நன்கு விளங்கும். இக்காலத்து மாந்தன் ஒருவனைப் பார்க்கும் பொழுது அவனுடைய உள்ள ஊறல்களும், அறிவு நரம்புகளும் மட்கிப் போய்விட்டன என்று சொல்லிவிடலாம். நாம் தன்னு ணர்வற்ற கோழைகளாகிவிட்டோம். உண்மையைக்கண்டால் அச்சமாக விருக்கின்றது. நேர்மைக்கும் நமக்கும் வெகு தொலைவு. இறைப்பை நினைத்து அலமருகின்ருேம். ஒருவரைக் கண்டு ஒருவர் நடுங்குகின்ருேம். முழுமையான உள்ள எழுச்சி நிறைந்த ஒருவனை நம் காலத்தில் பார்ப்பது அருமையினும் அருமையாக விருக்கின்றது. இந் நிலையில் இப்பொழுதுள்ள வாழ்க்கையையும், மன்பதையின் போக்கையும், முற்றிலும் திசை திருப்பி நல் வழிக்கு இட்டுச் செல்லும் உண்மையான ஆடவரும் பெண்டிரும் ஏராளமாக வேண்டியிருக்கின்றனர். ஆனல் இங்குள்ள பெரும்பாலானவர்கள் தங்களுக்குள்ள வாழ்க்கைக் குறைபாடுகளைக்கூடத் தாங்களே போக்கிக் கொள் ளத் திறமையற்றவர்களாக விருக்கின்றனர். அவர்தம் திறமை யின் எல்லைக்கு மீறியதாகவிருக்கின்றது அன்னவரின் விருப்பம். மாந்தர் ஒருவர்க் கொருவர் ஒருவரைச் சார்ந்துகொண்டும் ஒரு வர்பால் ஒருவர் கையேந்திக் கொண்டுமே உள்ளனர். நமது

குடும்ப அமைப்பில் பெருமையில்லை! நம் கல்வி, தொழில், திருமணம், கொள்கை முதலிய எதையும் நாம் வரையறுத்துக் கொள்வதில்லை. வலிந்த ஒரு சிலரே அவற்றை வரையறுக்கின் றனர். நாமெல்லாம் சமையலறைக் காவலர்கள் ஆகிவிட்டோம். சூழ்நிலையை எதிர்த்துப் போகும் ஆற்றல் நமக்கில்லை.

நாம் தொடும் முதல் செயலில் தோல்வி ஏற்படுமாயின், இளைஞர்கள் சோர்ந்து போகின்றனர். வாணிகன் தொடக்கத்தில் வரும் இழப்போடு தன்னம்பிக்கையையும் இழந்து விடுகிறான். பள்ளி படிப்பையோ கல்லூரி படிப்பையோ முடித்த ஓராண்டிற் குள் ஏதாவதொரு வேலை கிடைக்காவிட்டால் தன்னைப் பெரிய படிப்பாளி என்று நினைத்துக் கொண்டிருப்பவன், நிலை குன்றிப் போய் விடுகின்றான். தான் ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ள வில்லையே என்ற நாணம் அவனுக்கிருப்பதில்லை.

ஈண்டுள்ளதைவிட மிகுதியான மன ஈடுபாடு மட்டும் இம் மாந்தர்க்கு ஏற்படுமானால் உலகில் அறம்,கல்வி, தொழில் முத லிய வாழ்க்கைக் கூறுபாடுகளிலும் அவற்றைக் கைக் கொள்ளும் முறைகளிலும் ஒரு பெரிய தெளிவு ஏற்பட்டு விடும் என்பதை அறிய வேண்டும்.

மாந்தன் எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகையில் என்ன வெல்லாமோ தனக்குத் தேவை என்று வேண்டிக் கொள் கின்றான். தனக்கென நன்மை வேண்டுமென்று இறைவனை வேண்டுவது இழிவும், திருட்டுத்தனமும் ஆகும். **தனக்குண் டான வினைப்பாடுகளை உண்மையாகச் செய்வது தான் இறைவனை வழுத்தும் மெய்யான முறை என்று அவன் அறிவ தில்லை.** குறிக்கோள் சிறிய அளவாக விருப்பினும் களைகளைப் பிடுங்கி எறிவதற்காக உழவனும், துடுப்புக்களை வலிப்பதற்காகப் படகோட்டியும், மண்டியிட்டு உட்காருவதும் உண்மையான வழிபாடாகும். இந்த வழிபாடே உலகின் எம்மருங்கிலும் ஒலிக் கும் ஆற்றலுடையது. நாம் இறைவனை நோக்கி வருந்திவேண்டு வதும், அவனை நொந்து கொள்வதும் நம் நம்பிக்கைக் குறைவை யும், உள்ளத்தின் உறுதியின்மையுமே காட்டுகின்றன. பிறர் வருத்தத்திற்காக இரங்கும் போலிச் செயலும் வேண்டுவதில்லை.

உண்மையாகத்தொல்லையுறுபவர்க்கு உதவிசெய்ய முடியுமானுல் இரங்கு. இல்லையேல் உன் வேலையை நீ செய்து கொண்டு போ. தொல்லை தானுகை நீங்கிப் போகும். பிறர் அழுவதைப் பார்த்து நாம் அவர்களோடு சேர்ந்து அழுவதும் சிறுமைச் செயலே. அறிவின்றி அழுது கொண்டிருப்பவர்க்கு, மின்னல் வெட்டுவது போலப் பேசி ஆறுதல் கூறி உண்மையை உணர்த்துவதற்கு மாருக, நாமும் சேர்ந்து கொண்டு அழுவது நாம் செய்யத் தக்க தில்லை.

உண்மையான உள்ளத்தின் வலிந்த ஆற்றலைக் கொண்டு எவன் தன்னைத் தானே கைதூக்கி விட்டுக்கொள்ளும் முயற்சி யில் ஈடுபடுகின்ருனே அவனே இறைவனுக்குகந்தவன்! **'துயர் களைப் பார்த்து மனந் தளராது விடாப்பிடியோடு முன் செல்ப வனுக்கு இறைவன் மிக விரைந்து உதவிக்கு வருகின்ருன்'.** என்று ஈரானிய மெய்யறிஞன் ஒருவன் கூறுகின்ருன். *

ஒவ்வோர் அறிஞனும் ஒவ்வொரு புதிய படைப்பாளன். அவன் தன் அறிவு ஆழ்ந்து போகப் போக, உள்ளத்தால் மிகுந்த இன்பம் பெறுகின்ருன். ஒவ்வொரு சமயமும், அறத்தைப் பற்றியும், கடவுளுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும், தோன்றியுள்ள சில அடிப்படையான உண்மைகளை விடாது பற்றிக்கொண்டு, மனவாற்றலுள்ள ஒருவன் ஏற்படுத்துகின்ற பாகுபாடே. இச் சமயக் கொள்கைகளே உண்மையின் கூறு பாட்டை யறியாதவர் தமக்கு மறைகளாகி விடுகின்றன. அது இறைப் பேராற்றலைப் போயடையும் ஒரு கருவி என்றறியாமல் அதுவே இறை என்று எண்ணி விடுகின்றனர். அத்தகையோர் அடிவானத்தை உலகத்தின் எல்லையென்று தவருக நினைத்துக் கொள்வர் போலப் போலிக் கொள்கையால் மயங்கு கின்றனர். புறச் சமயங்களைப் புறக்கணித்து ஏளனப்படுத்துகின்றனர். எல் லாம் வல்ல பேராற்றல் கதிரவன் ஒளிபோல் எல்லாருடைய குடிலுக்குள்ளும் நுழைந்து அங்குள்ளவர்க்கும் துணை நிற்கும் என்பதை மறந்து விடுகின்றனர். போலிச் சமயத் தலைவர்கள் பல பெருமைசேர் கோயில்களில் நுழையவென்று ஊர்ஊராகவும்,

* ''குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்'' என்னுந் திருக்குறளை ஓர்க.

நாடு நாடாகவும், அலைகின்றனர். ஆனால் உண்மை மெய்யறிஞனோ தன் இருப்பிடத்திலேயே இருக்கின்றான். மிகத்தேவையாக உள்ளபோதுகூட அவன் அடிக்கடி தன் இருப்பிடத்தை விட்டுநீங்குவதில்லை. மூட்டை கட்டிக்கொண்டும், தம் நண்பர்களைப்பார்த்து விடை பெற்றுக்கொண்டும், ஊர் ஊராய்ப்போய்க் கோயில் குளங்களை வழிபடுவது மூடர்கள் விரும்பும் செயல். நம் உள்ளக் கவலைகளை மாற்றப் பெருமையுற்ற அத் திருப்பதிகளில் நம் கால்களை வைக்கும் முன்பே நம் கவலைகள் அங்குப் போய் எதிர்கொண்டு நமக்காகக் காத்திருக்கின்றன. ஆனால் நாம் போய்விட்டோமே என்பதற்காக அங்குள்ள வழிபாட்டிலும், காட்சிகளிலும் நம் உள்ளம் மகிழ்ந்ததாகப் பிறர் நம்புமாறு நாம் நடிக்கின்றோம். எங்குப் போனாலும் நம் நிழல் போலவே நம் சுழல்கின்ற உள்ளமும்கூட வருகின்றதை நாம் உணர வேண்டும். இத்தகைய செலவுகள் யாவும் மன நோயின் விளைவுகளே.

ஒருவரைப் பார்த்துப் பின்பற்றாதே! உன் தனிம ஆற்றலை வெளிப்படுத்து. ஒவ்வொருவனுக்கும் அவனவன் முற்றும் முழுமையாகச் செய்யும் ஆற்றலை, அவனைத் தோற்றுவித்த பேராற்றலே உண்டாக்கித் தர முடியும். ஒருவன் ஒன்றில் சிறப்புற்றவன் என்று அவனே தன்னைப்பற்றி உலகுக்கு வெளிப்படுத்துகின்ற வரையில், அவனாற்றலை எவரும் முன் கூட்டியே அறிந்து கொள்ளல் சாலாது. செகப்பிரியர், பிராங்களின், வாசிங்டன், பேகன், நியூட்டன் ஆகிய இவர்கட்கு, அறிவூட்டக்கூடிய ஆசிரியன் எங்கு இருக்கின்றான்? ஒவ்வொரு பெருமகனும் தன்னந்தனியனே. செகப்பிரியரைப் பார்த்து வேறொரு செகப்பிரியராகிவிட முடியாது. உனக்குள் பொதிந்து வைக்கப் பட்டுள்ள கல்வியைப் பயில். நீ அதைத் தெரிந்து கொள்ள விரும்புவாயானால் எல்லா ஆற்றலும் எளிதில் உனக்கு வரும். இந்நொடியில் உன்னுள்ளே ஒரு பெரிய ஆற்றல் உள்ளது. அதன் அடிவழி நீ, நடக்கத் தொடங்குவையானால், உன்னைக் கடந்துபோன ஊழிகளை நீ மீண்டும் படைத்து விடுவாய்.

மக்கள் கூட்டம் முன்பிருந்ததைவிட மிகவும்மேம்பாடடைந்துள்ளது என மக்கள் தங்களைத் தாங்களே வியந்து பாராட்டிக்

கொள்கின்றனர். ஆனால் அவருள் ஒருவனாவது சிறப்புற்று விளங்குவதாகத் தெரியவில்லை.

மக்கள் கூட்டத்தில் வளர்ச்சி என்பதே இல்லை. ஒரு புடை முன்னேறினால், ஒரு புடை பின்னடைகின்றது. என்றும் இடைவிடாத மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. நாகரிகமற்ற வாழ்விலிருந்து நாகரிகத்தை அடைவதாகக் கூறப் படுகின்றது. புதிய சமயங்களை உண்டாக்கி யிருப்பதாகப் பெருமைப் படுகின்றது. செல்வத்தைப் பெருக்கி யிருப்பதாக ஆரவாரிக்கின்றது. பூதவியல், வேதியல் முதலிய அறிவியற் கலைகளில் வளர்ந்துள்ளதாக வாய்ப் பெருமை காட்டுகின்றது. ஆனால் இத்தகைய மாறுதல்களால் மக்கட்குப் பண்பு வளர்ச்சி ஏற்படக் காணோம். ஒரு நன்மை பெற வேண்டி இன்னொரு நன் மையைவிட வேண்டியுள்ளது. மக்கள் கூட்டம் புதிய கலைகளைத் தோற்றுவிக்கின்றது. ஆனால் அதற்கீடாகப் பழைய இயற்கை உணர்வுகளையும், மனவாற்றல்களையும் இழத்தல் செய்கின்றது. உயரிய வெள்ளை உடை பூண்டு கையில் எழுது கோலும், சட்டைப்பையில் மணிப்பொறியும் காசோலையும் வைத்துக் கொண்டு படிக்கவும், எழுதவும், எண்ணவும் கற்றுள்ள நாகரிக மாந்தன்எங்கே? வில்லும், வாளும், ஈட்டியும் எடுத்துக்கொண்டு ஓர் ஓலைக் குடிலில் அரைகுறை உடையுடன் உலவிய முன்னைய மாந்தன் அங்கே? ஆனால் இந்த இருவருடையஉடல் நிலையைப் பார்க்குங்கால் நாகரிக மாந்தனுக்கு முன்னை நாளைய வன்மை தளர்ந்து விட்டதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

நாகரிக மாந்தன் இயங்கிகள் பல செய்திருக்கின்றான்; ஆனால் தன் கால்களின் முழு வலிமையையும் இழந்துவிட்டான். பிரம்பு பிடித்துக்கொண்டு நடக்கின்றான்; ஆனால் தசையின் வலிவு குன்றிவிட்டது. வேண்டும்போது படித்துக் கொள்ளலாம் என்று பல குறிப்புக்களை எழுதி வைத்திருக்கின்றான்; அதனால் நினைவாற்றல் அவனை விட்டு நீங்கிவிட்டது. புத்தகப் பெருக்கங் கள் அறிவை அழுத்துகின்றன. நாகரிக உணவுகளால் வல்லமை குறைந்து விட வில்லையா? உயிர் முறிக் குழும்பு. (Insurance Companies) தோன்றிய பின்தான் உயிர்ச்சேதங் கள் மிகுந்து போயின.

மாந்தனின் உயரத்திலும், பருமனிலும் எங்ஙன் மாறுபாடில்லையோ, அங்ஙனே உள்ள வளர்ச்சியிலும் மாறுபாடில்லை. இருபதாம் நூற்றுண்டின் அறிவு நூல், இயற்கை நூல், உயிர் நூல், பூத நூல், வேதி நூல் முதலியன யாவும் சேர்ந்து முன்னிருந்த பெரு மறவர் தம்மையும், பேரறிஞர் தம்மையும், உண்டாக்கக் கூடவில்லை. மாந்தன் உடைகளை மாற்றிக்கொள்வதும், அவற்றின் வண்ணங்களைப் புதுக்கிக் கொள்வதும் போல் நாகரிகப் பொருள்களை வளர்த்துக் கொண்டிருக்கின்றுனே யல்லாமல் தன் உடல், உள்ளத்திறமைகளை உயர்த்திக் கொள்ளச் சிறிதும் முயலவில்லை. புதிதாகக் கண்டுபிடிக்கும் ஒரு பொறியிஞல் நமக்கு ஏற்படுகின்ற நன்மைக்கும் அதஞல் நம் ஆண்மைக்கும் அகத்திற்கும் ஏற்படுகின்ற தீமைக்கும் கணக்குச் சரியாகப் போய்விடுகின்றது. சில நூற்றுண்டுகட்குமுன் மிகுந்த ஆரவாரப் படுத்திய பொறிகள் இன்று தூக்கி யெறியப்பட்டு அவ்விடத்தைப் புதுப் பொறிகள் வலிந்து பற்றுவது நமக்கு வேடிக்கையாக விருக்கின்றது.

மாந்தன் உயிராற்றலை மிகுக்கின்ற வினைப்பாடுகளை விட்டுவிட்டு எளிய அவன் உடலாற்றலையாவது பேணுமல், தன் புற வாழ்க்கைப் பருப் பொருள்களையே நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டிருக்கின்றுன். செல்வமே அவனுக்குக் குறிக்கோளாகி விட்டது. அறச் சாலைகளையும் கல்விச் சாலைகளையும், அரசியல் மன்றங்களையும், அச்செல்வத்தின் காப்பாளர்களாகவே பயன் படுத்தத் துவங்கிவிட்டான். எவனுவது இவன்றன் கல்வி யிழிவையும் அறப்போலியையும், அரசியல் கூத்தாட்டங்களையும் கடிந்து கூறுவாஞனல், மக்கள் எல்லாரும் சேர்ந்து கொண்டு அவன்மேல் விழுந்து தாக்குகின்றனர்.

இக்காலத்தவன் பெருமை அவன் சேர்த்த சொத்துக்களிலேயே இருப்பதாக எண்ணுகின்றுன். தன் தன்மையைப் பற்றி அவன் கவலைப்படுவதில்லை. ஆனல் அறிவுள்ளவன் தன் சொத்துக்களின் பெருக்கத்தைக் கண்டு நாணுகின்றுன். தன் பண்பு போய்விடுமோ என்று அஞ்சுகின்றுன். இன்னும் அவனுக்குள்ள செல்வம் தன் முன்ஞேர் வழியாவது பிறர் கொடுத்த கொடையிலாவது தவருன வழியிலாவது கிடைத்திருப்பின்

அதை அருவருத்துத் தொடவும் கூசுகின்ருன். அது தன் உடைமையன்று; அதன் வேர் தன்னுள் இல்லையென்றும், ஒரு கள்வனிடமோ ஏமாற்றுக்காரனிடமோ அது சிக்கிவிடாமல் ஏதோ ஒரு நல்ல காரணத்திற்காகவே அது தன்னிடம் வந்து தங்கியிருக்கின்றது என்பதையும் நன்ருக உணர்கின்ருன்.

நம் ஆற்றல் கொண்டு நாம் தேடுவது, நம் உள்ளத்துள்ள மெய்ப்பொருள்தான். நமக்கென்று காத்து வைக்கப் பெற்றுள்ள அழியாத பொருள்களும் அவையே. பிற வெளிப் பொருள்களைத் தேடி உங்கள் உள்ளங்களை நாறவிட்டு உங்கள் மேனித் தசைகளையும் அழுகவிட்டு உங்கள் குப்பாயங்களை மட்டும் தடித்த துணியினுலோ மெல்லிய பட்டுகளாலோ தைத்துப் போட்டுக் கொள்ளாதீர்கள்.

உள்ளம் பேராற்றலின் இருக்கை; அது இறைவனின் படுக்கை. அதை விட்டு விட்டுப் பிறி தோரிடத்தில் இன்பத்தையும் நலத்தையும் வறிதே தேடித் திரிவதால் தன்னுள்ளத்து வீற்றிருக்கும் அரிய ஆற்றல் குன்றிவிடுகின்றது என்று ஒருவன் அறிந்துகொண்டு அவன் தன் அறிவையும் உள்ளத்தையுமே நம்பி நடப்பானுகில், அவன் வாழ்க்கை வளைவுகளெல்லாம் நேராக்கப் பெறுகின்றன. தன்னையறிந்தவுடன் அவன் நிற்கத் துவங்குகின்ருன்.

செல்வம் என்று பொதுமக்களால் கூறப்படும் ஆரவாரப் பருப் பொருள்கள், சூதாடுபவர்களின் கைகளில் விழுவதுபோல ஒருகால் ஒரு சேர வந்து விழும். மறுகால், அவரை விட்டு ஒரு சேரப் போகும். (''கூத்தாட் டவைக் குழாத் தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அதுவிளிந்தற்று''என்ற திருக்குறளை ஓர்க.) இவற்றைத் துகள்களாக எண்ணு. உன் உள்ளத்தின் வளர்ச்சியும் தூய்மையுமே உன் உண்மையான செல்வம். அவைதாம் உனக்கு அமைதியைத் தரும்; உன்னை வெற்றி அன்னையின் மடியில் கொண்டு போய்க் கிடத்தும். உன்னை நீயே அறி; உன்னை நீயாகவே ஆக்கிக் கொள்.

உணர்வுப் பத்து.

(கலிநிலைத் துறை)

தாயுந் தாதையுஞ் சுற்றமும் மகிழத் தாம்பிறந்து
வாயுங் கையும் வயிறும் புடைக்க வலிந்துண்டு
நோயும் நொடியுந் தேடுவர் உய்யார்; நொடிந்திறப்பின்
நாயும் நரியும் அன்றிப் பிறரார் நண்ணுவரே? (1)

உள்ளும் நெஞ்சும் உயிரும் இருக்க உலகினர்பால்
கொள்ளும் அன்புந் தொண்டும் இருக்கக் கூசாமல்
கள்ளுங் கலவியும் உயர்வென் றெண்ணிக் களிப்பாரைப்
புள்ளும் புழுவும் அன்றிப் பிறரார் போற்றுவரே? (2)

ஒழுகும் முறைமை ஒழுகார் உயர்ந்தோர் உரைமதியார்
அழுகும் பொருட்கும் உடற்குந் தனியா தங்காந்து
முழுகும் தொழுகையும் செய்வார்; உள்ள முனைப்பிலரைக்
கழுகுங் காகமும் அன்றிப் பிறரார் களிப்பாரே? (3)

கண்டது காட்சி கொண்டது கோலம் கவின்பழுத்த
பெண்டறு இன்பே பெரிதா மென்றே பிழைசெய்வார்;
தொண்டும் புரியா துளமும் பேணா திருப்பாரை
உண்டது பேசிப் புகழும்; பிறரார் உவப்பாரே! (4)

தேறார்; உள்ளந் தெளியார்; வாழ்க்கைத் திறனறிந்து
மாறார்; அன்புஞ் செல்வமுந் தொண்டும் பிறர்க்களியார்;
ஏறார் வாழ்வில்; இத்தகை யோரைப் பித்தல்லால்
வேறார் போற்றிப் புகழ்வார்; நினைவார்; விழைவாரே! (5)

ஈன்றிய வர்க்கும் இனத்தார்க் கும்நிலை இழிந்தார்க்குந்
தோன்றிய குடிக்கும் மொழிக்கும் நாட்டுத் தொண்டிற்குஞ்
சான்றவர் துயர்க்குந் துணையா யிருமின்; மனம் வைமின்;
ஊன்றிய வாழ்விற் கொருபயன் காண்மின் உலகீரே! (6)

துரை மாணிக்கம்

விண்ணிற் பாய்வீர்! வேறுல காள்வீர்! வியனுறவே,
நுண்ணிய அறிவாற் பற்பல ஆய்வீர்! உளம்பேண
எண்ணிட மாட்டீர்! உயிர்முனைப் பிழந்தீர்! இகவாமல்
மண்ணிற் பிறந்த மக்களைப் பேண மறவீரே! (7)

நோக்குங் கண்ணுங் கேட்குஞ் செவியும் நுண்ணணுவாய்த்
தேக்கும் அறிவும் உள்ளத் திறனுந் தெளிந்துணராப்
போக்கும் நிலையும் உய்வும் தெய்வும் பொலிந்திருக்க
நாக்குங் குடலும் மட்டும் பேணி நலிவீரே! (8)

நெஞ்சங் கரையார்; நினைவுந் தெளியார்; நிகழ்வறியார்;
அஞ்சும் அஞ்சும் அஞ்சு ளொடுங்கி அமைந்தவுடல்,
எஞ்சும் போதில் எஞ்சுவ விஞ்சுவ அறியாமல்
பஞ்சும் பொதியும் போலநினைவார், பயனிலரே! (9)

ஏவும் நெஞ்சும் இணையும் பொறியும் எதிர்ப்புலனும்
வாவும் அறிவும், அவற்றின் முதிர்வால் வல்லுடலுள்
கூவுங் குரலும் கேளார், உணரார், புறந்திரிந்த
மாவும் புள்ளும் என்றே மதிக்கப் பெறுவாரே! (10)

(3-ஆம் பாட்டு 2-ஆம்அடி 4-ஆம் சீரைத்
'தணியா' என்று திருத்திப் படிக்க)

<u>தமிழில் சொற்களா இல்லை.</u>

குறைகூறுவார் பார்வைக்கு.

குறிக்கோள் வகை.

கொள்கை	— சமய நம்பிக்கை அல்லது 'சித்தாந்தம்' (Doctrine)
கோட்பாடு	— சிறு கொள்கை (Tenet)
குறிக்கோள்	— குறித்துக் கொண்ட பொருள் (Object)
கருது கோள்	— கருதப் பெறும் கொள்கை. (Hypothesis)
ஏடல்	— சொந்தக் கருத்து (Idea)
நெறி முறை	— ஒருவன் தானே அமைத்துக் கொள்ளும் 'நியதி' (Principle)
நோக்கம்	— ஒரு பொருளின் மேலுள்ள நாட்டம் (Aim)
இலக்கு	— அடைய வேண்டிய எல்லை (Goal)
இலக்கம்	— எய்யும் குறி (Target)
விதி	— ஒழுக்க அல்லது மொழி வரம்பு (Fule)
சட்டம்	— அரசியலார் அமைத்த விதி (Law)
மேல்வரிச் சட்டம்	— ஒருவர் தாம் கையாளுவதற்குத் தாமே அமைத்துக்கொண்ட திட்ட வாக்கியம் (Motto)

— ஞா. தே.

காதல்புரி முறையும் மணவாழ்க்கையும்

ஆங்கிலத்தில்: எர்னஃச்ட் ஆவ்மன் (ERNEST HAVEMANN)
(தமிழில் "தங்கப்பா.")

"அமெரிக்காவில் மணவிலக்குகள் நாளுக்கு நாள் பெருகி வருவதன் அடிப்படைக் காரணம் என்ன?" குமுக வியல் அறிஞரும், அமெரிக்க மணவாழ்வுபற்றி நன்கு ஆய்ந்தவருமான பர். போசார்டு என்பார் இவ்விருவுக்கு அளித்த விடை இதுதான்:

"அமெரிக்க மண வாழ்வின் கோளாறுகட் கெல்லாம் காரணம் அவர்தம் காதல்புரி முறை (Courtship) யேஆகும்"

அமெரிக்கர் பலருக்கு இது அதிர்ச்சி தரும் செய்தியாகும். எல்லாருக்கும் மணவாழ்வு சிறக்க அமைவதில்லைதான். மொத்தத்தில் அமெரிக்கத் திருமணங்களில் நாலிலொரு பகுதி முறிந்துபோகவே செய்கின்றன. இதை அமெரிக்காவே ஒப்புக் கொண்டிருக்கின்றது. என்றலும் தங்கள் காதல்புரி முறையினை அமெரிக்கர் சிறப்பாகவே நினைக்கின்றனர். காதல் புரிவதற்குச் சிறந்த இடம் அமெரிக்காவே என நம்புகின்றனர். தங்கள் நாடே காதலுக்குக் கட்டுப்பாடு செய்யாத உரிமை நாடு என்று நம்பிப் பெருமைப் படுகின்றனர்.

அமெரிக்க இளைஞரும் நங்கையரும் தங்கட்கு ஒரு காதலர் வாய்க்கப் போவது உறுதி என்றும், என்றேனும் ஒரு நாள் அவரைக் கண்டு தம்மை ஒப்படைக்கும் நிலை வந்தமையும் என்றும் நம்புகின்றனர். பள்ளியிலும் விருந்துகளிலும் எங்கும் காதல் என்பதே பேச்சு. இக் காதலின் சொல்லுக் கடங்காச் சிறப்புப்பற்றிய பாடல்கள் ஆயிரக்கணக்கில் தலை நீட்டுகின்றன.

பர். போசார்டின் கருத்து முற்றிலும் வேருகவிருக்கின்றது. **மணமும் குடும்ப வாழ்வும் மாந்த இனத்தின் தலையாய, தூய ஏற்பாடுகள்** என்பது அவர் கருத்து. அழகிய உடையணிந்தும் மேனிக்கு மெருகூட்டியும் வாழ்க்கைத் துணைக்கு வலை வீச

முயல்வது பற்றிய எண்ணமே அவர்க்குக் கசப்பளிக்கின்றது. தம்மக்கள் அவரவர்க்கேற்ற துணைவரைத் தேர்ந்துகொள்ள உரிமை வழங்குவதில் அமெரிக்கப் பெற்றோர் மிகத் தவறான வழிகளைக் கையாள்கின்றனர் என்கின்றார் அவர்.

இதனை முழுதும் மறுப்பார் எவருமிலர் எனினும் இக்கருத்துப் பழங்காலக் கருத்தென்று அமெரிக்கர் கருதுகின்றனர். இளைஞரும் பெண்டிரும் கலந்துறவாடுவது பிறப்புரிமை என்றும் ஆணும் பெண்ணும் காதலித்து மணந்து கொள்வது இயற்கையின் சட்டம் என்றும் பலர் நம்புகின்றனர்.

ஆனால் இக் காதல்புரி முறை எப்பொழுதும் இவ்வாறே இருந்தன்று; உலகின் பல பகுதிகளிற் காணப்படுவதுமன்று.

1961–ஆம் ஆண்டின் அமெரிக்கக் காதல்புரிமுறை உண்மையிலேயே மிகப் புதியதுதான். இக்காலத்தே முளைத்தெழும் பல புதுமைகளைப் போலவே இதனையும் முன்னேற்றம் என்று கருதுவதற்கில்லை. ஆய்வாளர் நோக்கின்படி நன்மையும் தீமையும் கலந்த ஒன்றே இம்முறை.

மாந்த வரலாறு முழுவதையும் எடுத்துக் கொண்டால் உயர் குடிமக்கள் என்றழைக்கப் படுவோரிடையே பெரியோரால் கூட்டுவிக்கப் பெற்ற மணமே நிலவி வந்துள்ளது. சொத்தினையும் மதிப்பினையும் பரிமாறிக் கொள்ளும் வகையில் பெற்றோரே பார்த்து ஏற்பாடு செய்யும் திருமணம் அது.

ஐரோப்பாவில் பெருநிலக் கிழமைப் பண்ணை முறைமை (Feudal System) அழிந்துபோனபின், நடுநிலை மக்கள் பலர் மேனிலையும் சொத்தும் அடைவதற்காக மேற்கொண்ட பழக்கங்களுள் முதலாவது இவ்வகைத் திருமணமே. 1890–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வரலாற்றாசிரியர் ஒருவர் மதிப்பிட்டுள்ளபடி அக்கால ஐரோப்பியத் திருமணங்களுள் பத்தில் ஒன்பது உலகியல் நலங் கருதிக் கூட்டுவித்த மணங்களே; காதல் மணங்கள் அல்ல. இத்தகைய மணங்களே ஐரோப்பாவின் பல பகுதிகளி

லும் தென்னமெரிக்காவிலும் கீழை நாடுகளிலும் இன்று பெரு வழக்கமாகவுள்ளன.

அமெரிக்க இளைஞரோ கூட்டுவிக்கப் பெற்ற இத் திருமணத்தை அச்சத்தோடு நோக்குகின்றனர். ''அத்தகைய திருமணங்கள் பேராசையுற்ற கிழவர் பலர் செருக்கால் ஏதுமறியா இளம் பெண்டிரை விலைக்கு வாங்கும் ''வன்செயல்'' என்று அவர் கருதுகின்றனர். அக் ''கொடுமை'' கண்டு குருதி கொதிக்கவும் செய்கின்றனர். இவ் வெண்ணங்களில் ஓரளவு உண்மை உண்டு. பெற்றோரின் முரட்டுத் தனத்தால் காதற் பிணைப்புக்கள் பல சிதைக்கப் படுமளவுக்கு இவ்வகைத் திருமணங்கள் கொடியனவாயும் பல துன்பங்கட்குக் காரணமாயும் இருந்திருக்கின்றன. தீய வழியிற் பணம் பறிக்கும் கொடுஞ் செயல்களும் இவற்றினடிப்படையில் நிகழ்ந்திருக்கின்றன.

ஆயினும் இத்தகு மணங்களில் மாட்டிக் கொள்ளும் கீழை நாட்டு இளநங்கையர்க்காக அமெரிக்கர் வருந்துவது வீண் என்றே தோன்றுகின்றது. ஏனெனில் கீழைநாட்டுப் பெண்டிர் தங்கள் நிலைக்கு வருந்துவதாகவே தெரியவில்லை. மாறாக அமெரிக்கப் பெண்டிர் நிலைக்கே அவர் பெரிதும் இரங்குகின்றனர் எனலாம். கணவனைத் தேர்ந்தெடுப்பதற்காக ஓர் இளம் பெண் தன்னந்தனியாக ஆடவர் நடுவில் திரிந்தலைந்து, பகட்டால் மயக்கிக் காதல் புரிவது கீழை நாட்டுப் பெண்டிர்க்கு இழிவாகவும் தன்மைக் குறைவாகவும் படுகின்றது. ஒரு சீனப் பெருங்குடி மகள் இவ்வாறு காதல் வேட்டையில் ஈடுபடுவதே இல்லை. தனக்கொரு கொழுநனைத் தேடியளிப்பது பெற்றோர் தம் தூய கடமை; அக்கடமையை அவர் திறமுறச் செய்து முடிப்பர் என்ற நம்பிக்கையிலேயே அவள் வளர்கின்றாள். 'நல்ல குடும்பச் சூழலும் உளத்தகுதியும் வாய்ந்த இளைஞனைத் தேர்ந்தெடுக்கத் தன்னிலும் தன் பெற்றோரே தக்கவர்' என அவள் உறுதி கொண்டிருக்கிறாள்.

''மேலை நாட்டார் காதலித்துப் பின் மணந்து கொள்வர். நாங்களோ மணந்து கொண்டு பின் காதலிக்கும் வழக்க

முடையோம்'' என்று கூறிக் கொள்ளக் கீழை நாட்டார் விரும்புவர்.

கீழைநாட்டு முறையே மேலைநாட்டு முறையினும் சிறந்ததாகத் தோன்றுகின்றது. மேனாட்டார் பலர் இதைஉணர்வதில்லை எனினும், பர். போசார்டு அவர்கள் கருதுவது போல், ஏற்ற துணையைத் தேர்ந்து கொள்ளும் கடினமான பணியில் ஈடுபடுதற்கு இளைஞரினும் பெரியோரே ஏ ற் ற வ ர் என்ற கீழை நாட்டுக் கருத்தே பொருத்தமாகப் படுகின்றது.

ஓரளவு கட்டுப்பாடிருந்தபோதினும் பொதுவாக அமெரிக்கப் பெற்ருேர் காதல்துறையில் தம் மக்கட்கு மிகுதியான உரிமையே வழங்குகின்றனர் எனலாம். காதல்புரிவது மூச்சு விடுவதுபோல மிக இயற்கையானதாகக் கருதப்படுகின்றது. இளைஞரும் முதியோரும் இவ்வாறே கருதுவதாகத் தெரிகின்றது.

பழங்காலத்தில் இந்நிலை இருந்ததா என்று எண்ணிப் பார்க்கின், காதல் என்ற சொல் அக்காலத்திலும் பெரு வழக்கமாகவே இருந்ததுதான் ஆயினும் அஃது இறையன்பினையும், மாந்தருள் பொதுவாக நிலவும் இணையன்பினையும் குறிக்கவே பெரும்பாலும் பயன்பட்டு வந்திருக்கின்றதே யன்றி, ஓரிளைஞனும் நங்கையும் எதிர்ப்பட்ட ஞான்று எழுகின்ற வெறும் பருவக் கிளர்ச்சியின் ஆர்ப்பாட்டத்தைக் குறிக்கப் பயன் படுத்தப் பெறவில்லை.

அமெரிக்காவில் பெரு வழக்கினதான இக்கவர்ச்சிநிலைக் காதலைப்போன்ற ஓர் உறுதியற்ற-தெளிவற்ற உணர்வு, வாழ்வாக்கம் கூட்டும் திருமணத்துக்கும் இனப் பெருக்கத்துக்கும் சிறந்ததோர் அ டி ப் ப டை ஆவதில்லை. வாழ்க்கை வேறு காதல் வேறு என்று கருதியதாலேயே, இடைக்காலப் பெருங்குடி மகளிர் ஒரு புறம் மணவாழ்வைச் செவ்வனே அமைத்துக் கொண்டு, மறுபுறம் ''காதல்'' புரிவதற்கு வேறிடம் பார்த்துக் கொண்டனர். பரபரப்பூட்டும் புதினங்களும் பாலுணர்வைத் தூண்டும் திரைக் காட்சிகளும் அவற்றின் காதற் பாடல்களும் தோன்றுவதற்கு முந்திய பழங்காலங்களில், உளம்உறவாடாமல் வெறும் பருவக்கிளர்ச்சியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டெழுந்த இப்போலிக் கவர்ச்சியை எவரும் பெரிதாக மதித்ததேயில்லை.

(தொடரும்)

''தென்மொழி'' யே வருக!

புலவர் வி. பொ. பழனிவேலன்
(கீழைக்கலையிளைஞன்.)

தமிழ்மொழிப் பெருமை சாற்றுதற் கரிதாம்;
இமிழ்கட லுலகில் ஏற்றமிக் குடைத்தாம்.
என்றிது தோன்றிய தென்றியம் பொண்ணு
மன்றிருந் தாய்ந்த மாண்புமிக் குடைய
கன்னித் தமிழ்தான் களங்கமற் றதுகாண்.
பண்டைப் பெருமை பகர்ந்தென் பயனும்?
இன்றைக் கிருக்கும் இழிநிலை யறிமின்.
வடமொழி கலந்தும், ஆங்கிலம் அளைந்தும்,
பிறமொழி கலந்தும் பேசும் தமிழர்காள்!
வழக்கொழி மொழிபோல் வண்மை யிழந்து
பழிக்கப் படுநிலை வண்டமிழ்க் கின்றே!
என்றும் அழியா ஏற்றமிக் குடைய
பண்டைத் தமிழியல் பரந்து மிளிர
அரசியல் துணையும் அன்பர் துணையும்
வேண்டி நிற்கின்றாள் வியன்றமி ழன்னை.
மாற்றலர் பலரும் மாசுண் டாக்கத்
திட்டமிட் டிங்குத் திறம்பட முயன்று
வருந்தா ளிகைகள் எண்ணில வாகும்.
''தமிழைக் கெடுப்போர் தனித்தமிழ் அன்பரே'',
என்றோர் அமைச்சர் இயம்பு கின்றார்.
அவர்தான் அந்தோ அறியார் மொழியியல்.
செந்தமிழ்க் குழைக்கும் சீரிய ஏடுகள்
ஓரிரண் டென்றால் உண்மை யறிவீர்.
தமிழால் அறிவியல் கருத்தைத் தெரிக்க
முடியா தென்போர் முடியா தவரே.
அறிஞர் முயன்றால் அனைத்தும் எளிதே.
எழுத்து மாற்றம், பொதுமொழி மாற்றம்
என்ற கூச்சல் எழுமிவ் வேளை
''தென்மொழி'' தோன்றல் தேனினு மினிதே.
தமிழர் யாவரும் தனித்தமிழ் வளர்க்க
ஆர்வங் கொண்டே அலையுமிந் நேரம்
பீடு நடையுடன் தேடுவோ ரில்லம்
நாடி வருக! நல்ல''தென் மொழி''யே.

உலக நாடுகளும், பரப்பும், மக்கள் தொகையும்

உலகின் மொத்த மக்கள் தொகை 311,50,00,000.

ஒவ்வோராண்டும் பெருகிவரும் மக்கள் தொகை: 5 கோடி.

உலக மக்களில் 57 விழுக்காடு ஆசியாவிலும், 21 விழுக்காடு ஐரோப்பாவிலும் உருசியாவிலும், 14 விழுக்காடு அமெரிக்காவிலும், எஞ்சிய 8 விழுக்காட்டில் பெரும்பாலோர் ஆப்பிரிக்காவிலும் வாழ்கின்றனர்.

	நாடுகள்.	பரப்பளவு (கற்பெருக்கம்)	மக்கள் தொகை.	ஒரு கற்பெருக்கத்திற்கு
1	சீனம்	3759000	717000000	191
2	இந்தியா	1259765	448000000	356
3	உருசியா	8603852	221000000	26
4	அமெரிக்கா	3615212	187000000	52
5	இந்தோனேசியா	575895	97000000	17
6	பாகித்தான்	365037	97000000	266
7	சப்பான்	142719	95000000	673
8	பிரேசில்	328800	75000000	24
9	செருமானியக் கூட்டுக் குடியரசு	95913	55000000	583
10	இங்கிலாந்து	94207	53000000	563
11	இத்தாலி	116286	49230000	423
12	பிரான்சு	212974	44970000	211
13	நைசீரியா	373280	35300000	95
14	மெக்சிகோ	760336	33304000	44
15	இசுப்பெயின்	194419	29894000	154
16	போலந்து	120359	29250000	243
17	துருக்கி	296185	26881000	91
18	எகிப்து	386198	25625000	66
19	பிலிப்பைன்ஃசு	115707	24750000	214
20	தென் கொரியா	3452	22900000	6633
21	தாய்லந்து	198270	21900000	110
22	மேற்காப்பிரிக்க நாடுகள்	1810420	21000000	12
23	அர்சன்டைனு	1072646	20500000	19
24	பர்மா	261789	20500000	78
25	ஈரான்	634400	20149000	32

	நாடுகள்.	பரப்பளவு (கற்பெருக் கம்)	மக்கள் தொகை. ஆயிரத்துக்கு முழுமையாக	ஒரு கற். பெருக்கத் திற்கு
26	யூகோசுலாவியா	98766	18500000	176
27	கனடா	3851809	18500000	5
28	உருமானியா	91699	18256000	199
29	எதியோபியா	395000	18000000	46
30	செருமானிய மக்கள் குடியரசு	41634	17500000	42
31	தென்னாப்பிரிக்கக் குடியரசு	472685	14673000	31
32	காங்கோக் குடியரசு	905380	13864000	15
33	கொலம்பியா	439513	13824000	31
34	செக்கோசுலவேகியா	49354	13500000	27
35	வடக்கு வியட்நாம்	63360	13000000	205
36	தெற்கு வியட்நாம்	65726	12000000	182
37	ஆப்கானித்தானம்	25000	12000000	48
38	நெதர்லாந்து	12746	11346000	8902
39	சூடான்	967500	11037000	11
40	பெரு	482259	10524000	22
41	அல்சீரியா	921620	10400000	11
42	தைவான் பார்மோசா	13885	10400000	75
43	ஆத்திரேலியா	2971081	10398000	4
44	மொராக்கோ	172556	10000000	58
45	அங்கேரி	35919	9978000	278
46	இலங்கை	25332	9612000	379
47	பெல்சியம்	11779	9104000	773
48	போர்த்துக்கல்	35453	9052000	255
49	நேபளாம்	54000	9000000	167
50	தங்கநிகா	361800	8906000	25
51	கிரீசு	51182	8260000	161
52	நிலநடுக்கோட்டு ஆப்ரிக்க நாடுகள்	1135795	8150000	7
53	வட கொரியா	46814	7950000	170
54	பல்கேரியா	42796	7800000	365
55	சுவீடன்	173624	7400000	43
56	சிலி	286397	7365000	26
57	ஆத்திரியா	32374	7000000	216
58	மலேயா	50690	6590000	130
59	ஈராக்	171599	6590000	38
60	கியூபா	44218	6466000	146
61	கென்யா	224960	6450000	29
62	வெனிசூலா	352143	6413000	18
63	சவூதிஅரேபியா	618000	6000000	9
64	உகாந்தா	93981	5767000	61

	நாடுகள்.	பரப்பளவு (கற்பெருக்கம்)	மக்கள் தொகை. ஆயிரத்துக்கு முழுமையாக	ஒரு க. பெருக். க்கு
65	மொசாம்பிக்	297731	5739000	19
66	சுவிட்சர்லாந்து	15941	5235000	322
67	மடகாசுகர்	228000	5175000	23
68	கானா	92100	4911000	54
69	கம்போடியா	69900	4750000	68
70	டென்மார்க்	16619	4500000	27
71	பின்லாந்து	130119	4400000	34
72	சிரியா	71398	4267000	59
73	அங்கோலா	481351	4145000	9
74	ஈக்வாடர்	105685	4119000	39
75	துனீசியா	48332	3783000	78
76	நார்வே	125065	3600000	29
77	எயிட்டி	10714	356000	332
78	குவாடிமாலா	42042	3545000	84
79	பொலீவியா	424163	3416000	8
80	நியாசாலாந்து	49177	3267000	69
81	ஆங்காங்	391	2920000	7468
82	தெற்குரொடிசியா	150333	2860000	19
83	அயர்லாந்து	26600	2834000	107
84	உருகுவே	72172	2800000	39
85	மேற்கிந்தியத் திட்டுக்கள் கூட்டு	6557	2736000	417
86	லைபீரியா	43000	2506000	58
87	சிராலியோன்	27925	2500000	90
88	எல்சால்வடார்	8260	2476000	300
89	நியூசிலாந்து	103736	2403000	23
90	வடக்குரொடீசியா	288130	2330000	8
91	இசரேல்	7992	2089000	261
92	சோமாலிக் குடியரசு	246200	1931000	8
93	ஒண்டுராக்சு	43277	1888000	43
94	லாவோசு	91400	1700000	18
95	பராகுவே	157047	1677000	11
96	யோர்தான்	37302	1636000	44
97	சிங்கப்பூர்	225	1582000	7031
98	அல்பேனியா	11096	1551000	140
99	லிபனன்	4000	1550000	388
100	நிகராகுவா	57143	1423000	25
101	கோஸ்ட்டாரிகா	19695	1135000	58
102	லிபியா	679358	1092000	2
103	பனமா	28575	1024000	36
104	தென்மேற்கு ஆப்பிரிக்கா	317887	434000	14



— தாளாளன் —

(கருத்தூர் என்பது ஓரூர். அங்கு அண்மையில் நிறுவப்பெற்ற ''மெய்கண்டார் பூங்கா''வில் உள்ள ஒரு மேடையில் அவ்வூர் நண்பர்கள் சிலர் ஒவ்வொரு நாள் மாலையிலும் கூடுவர். அவருள் தலையாயவர் தமிழாசிரியர் **முத்துரையார்**, பல்துறை வாணிகர் **செந்நெறியார்**, தண்டலர் அலுவலகத் தலைமைக் கணக்கர் **பற்றுக்குறையார்**, ஊராண்மைக் கழகத் தலைவர் **ஓரம்போகியார்**, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் **மெய்த்தொண்டர்**, சரக்குந்து உரிமையாளர் **பணக்குறியார்** முதலியோர்; அவ்வப்பொழுது வேறு சிலரும் அவர்தம் உரையாடல்களில் வந்து கலந்து கொள்வார். இவ்வுரையாடல்கள் முற்றும் கற்பனையாலும் உரையாடற் கருத்துகள் நாட்டில் அவ்வப்பொழுது நடைபெறும் நிகழ்ச்சிகளை இடையொட்டியவையே! வெறும் பொழுது போக்கிற்காக எழுந்ததன்று இப்பகுதி. பொழுது போகாதவர்க்குத் தென்மொழியின் எந்தப் பகுதியும் பயன் தராது.)

(தமிழாசிரியர் முத்துரையார் மேடையில் தனியே அமர்ந்து கொண்டிருக்கின்றார். பூங்காவின் நடுவிலுள்ள காந்தியின் கற்படிமத்தில் அவர் கண்களும், அங்கிருக்கும் ஒலிபரப்பியில் அவர் காதுகளும் படிந்திருக்கின்றன. அக்கால் மெய்த்தொண்டர் மேடைக்கு வந்து கொண்டிருக்கின்றார். அவர் மெய்யில் கைந் நூல் (கதர்) உடை! கையில் அன்றைய செய்தித் தாள்! மேலொரு துண்டு! நடையில் மிடுக்கு!)

மெ.தொ: (வந்து கொண்டே) இந்தப் பூங்காவைத் திறந்தாலும் திறந்தனர்; தமிழாசிரியரை இப்பொழுதெல்லாம் வீட்டில் பார்ப்பதே அருமையாக விருக்கின்றது. பள்ளி விட்டதும் வீட்டிற்குப் போகின்றாரோ? இல்லையோ?

முத்: அடடே! வாருங்க ஐயா. என்ன செய்வது இந்தச் சிற்றூரில் வேறு போக்கிடம் இல்லையே! இதை நினைக்கையில் எனக்கு இன்னென்று படுகின்றது. இந்தப் பூங்காவை நிறுவுதற்கு நீங்களும் பணக்குறியும் பட்ட பாடு நன்கு நினைவிருக்கின்றது. அதுவும் இதைத் திறப்பதற்காக அமைச்சரைக் கொண்டு வர எத்தனை நடை நடந்தீர்கள்! அதையும் மறந்துவிடவில்லை. கையோடு கையாக, இதை அணைத்தது போலவே ஒரு நூல் நிலையத்தையும் திறந்து வைத்துவிட்டால், என் போன்றவர்க்கு இங்கு வேலையிருக்காது......!

மெ.தொ: அடடா. நல்ல கருத்தைச் சொல்லிவிட்டீர்கள் ஐயா. இதுபற்றி இனி முயற்சி செய்ய வேண்டியதுதான். (வந்தவர் அம்மேடையின் ஒருபுறம் துண்டைப் போட்டு அமர்கின்ருர்.)
செந்நெறியும், பணக்குறியும் வரட்டும் இன்றைக்கு அதைப்பற்றி ஒரு முடிவு கட்டுவோம்! இன்னென்று! நூல் நிலையத்தை ஏற்படுத்தி விடுவதுகூட மிக எளிது. ஆனல் அதை எந்த அமைச்சரைக் கொண்டு திறக்கச் செய்வது? அதுதானே பெரிய தொல்லை......
அதோ! நம் ஓரம்போகியார் வருகின்ருர். அட! பற்ருக்குறையும் கூட வருகின்றதே!

முத்: அதுதானே தொல்லை. (நகைப்பு)

(ஓரம்போகியும் பற்ருக்குறையும் வந்து மேடையின் ஒரு புறம் அமர்கின்றனர்),

ஓ. போ: என்...ன! மெய்த்தொண்டர் என்ன தொண்டுக்கு வழி வகுக்கின்ருர்?

ப.குறை: நான் ஒருவன் இருப்பதையே அவர் எப்பொழுதும் மறந்து விடுகின்ருர்.

(அனைவரும் 'கொல்'லெனச் சிரிக்கின்றனர்.)

மெ.தொ: என்ன செய்வது? நீங்கள் தலையிட்டால்தான் ஒரு செயலும் நடைபெறமாட்டேன் என்கின்றதே......

(மீண்டும் சிரிக்கின்றனர்.)

ப. குறி: அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் இருக்கின்றேன். (எல்லாரும் மீண்டும் பெருஞ் சிரிப்பு சிரிக்கின்றனர்.) முதலில் செய்தியைச் சொல்லுங்கள்.

மெ.தொ: சரி......கவலையை விடுங்கள். செய்திக்கு வாருங்கள் பூங்காவை அணைத்தது போலவே ஒரு நூல் நிலையத்தையும் ஏற்படுத்திவிட்டால்...

ப. குறி: ....நமக்கெல்லாம் அங்கு வேலையிருக்காது.........! (எல்லாரும் விழுந்து விழுந்து சிரிக்கின்றனர். சிரிப் படங்கி...) சரி சரி...நல்ல கருத்துதான். நம் ஊர்ப் பையன்களெல்லாம் மாலை நேரங்களில் பக்கத்தில் உள்ள கேட்டூர்க்குப் போய்த் திரைப்படம் பார்த்து விட்டு இரவு 3-மணிக்கு மேலல்லவா வீடு வருகின்றனர். அவர்களுக்குத் துணையாக, மிதி வண்டிக் கடை வேறு வைத்து விட்டார்கள். போக்கு வரத்துக்குக் கேட்க வேண்டுமா?... இதையெல்லாம் நூல் நிலையம் ஒன்று வைத்துவிட்டால் ஒருவாறு தடுத்து விடலாம்... நல்லது...இனி அதற்கு முயற்சி செய்வோம். முதலில் அதற்கு என்ன செய்வது?

ப.குறை: முதலில் நடப்பதிருக்கட்டும் ஐயா! எந்த அமைச்சரைக் கொண்டு அதைத் திறக்கச் செய்வது...?

முத்: ஏன்... அவரெதற்கு? நாம் நடத்துகின்ற ஒவ்வொரு வேலைக்கும் அவரைக் கொண்டு வந்துதான் ஆக வேண்டுமா?

மெ.தொ: அதற்கில்லை த மி ழ் ஐ ய ா! வந்து.........அது ஒரு பெருமை......!

முத்: யாருக்கு...?

மெ.தொ: ......ஏன் நமக்கெல்லாந்தான்!

முத்: நம் ஊரில் ஒருவன் புது வீடு கட்டிக் கொண்டான் என்றால் நாம் பெருமையா படுகின்றோம்...? அதுபோல் அமைச்சர் வந்து நூல் நிலையத்தைத் திறந்துவிட்டால் மட்டும் நமக்கென்ன பெருமை......?

மெ.தொ: உங்களுக்குப் பட்டறிவு போதாதுங்க ஐயா! இது பெரிய பயன் தருவதற்காகத்தான்.

ப.குறை: என்ன பயன்? தமிழ் ஐயா சொல்வதுதான் எனக்குக் கூடச் சரியாகப் படுகின்றது...

மெ.தொ: ஆமாமாம்......எப்பொழுதும் நீங்கள் அவர் பக்கந் தானே...(சிரிக்கின்றார்...தமிழாசிரியரும் சிரிக்கின்றார்)

ப.குறை: அது கிடக்கட்டும்...அமைச்சரைக் கொண்டு வருவதில் என்ன பயன் என்று சொல்லுங்கள்...முதலில்

மெ.தொ: அமைச்சர் வருகின்றார் என்றால் செய்தித்தாள் பார்வை யாளர்கள் கூடவே வருவார்கள். நூல் நிலையம் திறந்தது முதல்......

ப.குறை: ......மீண்டும் மூடியது வரைக் கொட்டை கொட்டை யாகத் தாள்களில் எழுதுவார்கள். அதைப் பல சிற்றூர் களிலும் நம்மைப்போன்ற மக்கள் படிப்பார்கள்........ ...அதன்பின் அவர்களும் நூல் நிலையங்களை அவரவர் ஊர்களில் திறக்க முயற்சி செய்வார்கள்...அவ்வளவு தானே நீங்கள் சொல்லவந்த பயன்?

மெ.தொ: பின்னே...இல்லையா?

முத்: *இதோ......பாருங்க மெய்த்தொண்டரே! ......நீங்கள் சொல்வது ஒரு வகையில் சரியாகப் படலாம். ஆனால் உண்மையில் அது நடப்பதில்லை. அப்படி நடப்பதா னாலும் அது வெறும் செயலுக்காகவே! பயன் இல்லாத போலிச் செயல்...!*

மெ.தொ: என்ன இப்படிச் சொல்கிறீர்கள்?

முத்: *பின்னென்ன? உண்மையான கல்வியறிவு வெறுஞ் செயலில் இல்லை. ஊர் ஊர்க்கு நூல் நிலையங்களைத் திறந்து கொண்டு போகலாம். மக்கள் அவற்றைப் பயன் படுத்துகின்றார்களா? அந்த நூல் நிலையங்களில் என்ன புத்தகங்கள் வைக்கப் பெறுகின்றன? யார் யார் வந்து படிக்கின்றனர்? எத்தகைய நூல்கள் மிகவும் விரும்பிப் படிக்கப் பெறுகின்றன? என்பதை*

யெல்லாம் அறிந்தால் நூல் நிலையங்களை அமைப்பதில் உள்ள போலிச் செயல்களையும் ஆரவாரங்களையும் நாம் உண்மையாக அறிந்து கொள்ளலாம்.

மெ.தொ: அதிருக்கட்டும்......... அமைச்சரை அழைப்பதற்கும் அதற்கும் உள்ள தொடர்பென்ன?

முத்: போனமுறை இந்தப் பூங்காவைத் திறக்க அமைச்சரை அழைத்தீர்களே! அதற்கு என்ன செலவானது?

மெ.தொ: அதைச் செந்நெறியாரைக் கேட்க வேண்டும். அவர் தான் கணக்கு வகையெல்லாம் பார்த்தார். ஏதோ... 400, 450 உருபாக்கள் செலவாகி இருக்கலாம்.

ப.குறை: நன்றாக எண்ணிப் பார்த்துச் சொல்லுங்கள் ஐயா. இன்னும் கூடுதலாக விருக்கும்.

முத்: கூடுதலோ? குறைவோ? இச் செலவு வீண் என்பதே என் கருத்து. மிகக் குறைவாகப் பார்த்தாலும் இந்தத் தொகைக்கு இன்னும் 200 நல்ல நூல்களை மேற்கொண்டு வாங்கலாம். (தொடரும்.)

தமிழ் மொழியின் சொல் வளம்.

பயிர் வகை.

பூசணம் அல்லது பூஞ்சணம் (பூஞ்சாளம்)	— நொந்த சோற்றிலும் ஈர மரத்திலும் தோன்றும் நுண்பாசி.
பாசம்	— நீர்மேலும் ஈரமுள்ள இடத்திலும் தோன்றும் பசுமையான நுண் பயிர்.
பாசி	— நீரில் அடிவரை படர்ந்துள்ள பாசம்.
காளான்	— ஈரமுள்ள இடத்தில் குடைபோல் தோன்றும் பயிர் வகை.
புல்	— அறுகு, குசை போன்றவை.
பூண்டு	— வெங்காயம், வெள்ளைப்பூண்டு போன்றவை.
செடி	— மிளகாய்ச் செடி, கத்தரிச் செடிபோன்றவை.
கொடி	— அவரைக் கொடி, பாகற் கொடி போன்றவை.
புதர்	— அடர்ந்த குத்துச் செடி.
பயிர்	— நெல், கம்பு, கேழ்வரகு போன்றவை.
மரம்	— மா, புளி போன்றவை.

– ஞா. தே.

(வாழ்க்கையில் எத்தனையோ உண்மையான நகைச் சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சில வெறுஞ் சிரிப்பை மட்டும் வருவிப்பன. ஒரு சிலவே அறிவைத் தூண்டி எண்ணவும் வைப்பன. அவற்றால் அந் நிகழ்ச்சியில் ஈடுபட்டாரே யன்றிப் பிறரும் பயனடைய வேண்டும். ஆங்காங்கே நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை மாணவர்களும் கற்றறிந்த பெருமக்களும் இப்பகுதிக்கு எழுதியனுப்பலாம். கற்பனை நிகழ்ச்சிகளைவிட உண்மை நிகழ்ச்சிகளே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றன. வெளியிடப் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இரண்டு உருபாக்கள் அனுப்பப் பெறும். — ஆசிரியர்.)

இளவரசரின் இனத்தவர்...!

அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர் மார்க்டுவைன் தம் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியை ஒருகால் தம் நண்பர் ஒருவரிடம் குறிப்பிட்டார்.

''நான் ஒருமுறை ஆத்திரியாவுக்குச் சென்றிருந்த பொழுது ஒரு தவற்றுக்காக ஊர் காவலரிடம் சிக்கிக் கொண்டேன். அவர்கள் என்னைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று என்னைப் பற்றி விளக்கங் கேட்டனர். நான் காவல் தலைவரிடம் வேல்சு நாட்டு இளவரசரின் இனத்தவன் என்று சொன்னேன். உடனே எல்லாம் சரியாகிப் போனது. என்னைத் தண்டிக்காது விட்டதுமன்றி, என் மன்னிப்பை வேறு வேண்டினர். மிகவும் மதிப்புச் செலுத்தி, எனக்கு வேறு ஏதாகிலும் தேவையா என்று வினவினர். நான் எவ்வாறு தவறாகப் பிடிக்கப் பெற்றுவிட்டேன் என்பதை விளக்கி, அதற்கு முழுக் காரணமான காவற்காரனைத்

தூக்கிவிட்டு விடுவதாகவே கூறினர். எதிர்பாராமல் நடந்ததை மறந்து அதைப் பெரிது படுத்த வேண்டாமென்று பலவாறு இறைஞ்சிக் கேட்டுக் கொண்டனர். நானும் சரியென்று வந்து விட்டேன்;

"நான் சொன்னதை அவர்கள் சரிவரப் புரிந்து கொள்ள வில்லை. வேல்சு இளவரசருக்கு உறவினன் என்றோ, அதே குடும்பத்தவன் என்றோ நான் சொல்லவில்லை. இளவரசர் மக்கள் இனத்தவர். நானும் மக்கள் இனத்தைச் சேர்ந்தவன் தான் என்றே அவர்களிடம் கூறினேன். ஊர் காவலர் நன்கு எண்ணிப் பாராமைக்கு நான் பொறுப்பாக முடியுமா? அவர்கள் ஏமாந்தது பற்றி எனக்குக் கொஞ்சம் வருத்தந்தான்; ஆனால் நான் எதுவும் பொய் சொல்ல வில்லையே!" என்றார்.

"இரா. ந." கடலூர்.

*　　*　　*

இரசியன் பழம்!

கேரளத்திலுள்ள கொல்லம் என்ற ஊரில் நான் சில நாட்கள் தங்க நேர்ந்தது. ஒரு நாள் கடைக்குச் சென்று வாழைப் பழத்தைப்பார்த்து, "இது என்ன விலை?" என்றேன். கடைக்காரன், "இது இரசியன் பழம் ஒன்று ஒரணா" என்றான். எனக்கோ வியப்பாக இருந்தது. "இரசியன் பழமா?... இரசியாவிலிருந்து கூட இந்தியாவுக்குப் பழம், வருகிறதா" என எனக்குள்ளேயே எண்ணிக் கொண்டேன். பழத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தேன். அது ஒன்றும் புதுமையாகத் தெரியவில்லை. வாங்கித் தின்று பார்த்தேன். சுவையும் நம் ஊர்ப் பழம் போலவேதான் இருந்தது.

அதைப் பற்றி எண்ணிக் கொண்டே வந்து என் மலையாள நண்பரிடம் நடந்ததைச் சொன்னேன். "இரசியாவில் வாழைப் பழம் எங்கே விளைகிறது? இந்தியாதானே இரசியாவுக்கு வாழைப் பழத்தை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது" என்றேன். அவர் கடகடவென்று சிரித்துவிட்டு, "கடைக்காரன்

இரசியன் பழம் என்று சொன்னதற்கு இரசியாவிலிருந்து வந்தது என்று பொருளன்று. மலையாளத்தில் "இரசியன்" என்றால் அருமையான, நல்ல என்று பொருள். அருமையான பழம் என்பதைத்தான் 'இரசியன் பழம்' என்று சொல்லியிருக்கிறான். இரசியன் பழமாவது, அமெரிக்கன் பழமாவது" என்றார்.

— கா. சந்திரசேகரன்,
சென்னை-15.

* * *

அன்புத் திருத்தம்...!

செல்வர் ஒருவர் இறந்து போனார். கணவனை இழந்த அவர் மனைவி அவர் கல்லறையின்மேல் "அமைதியாக உறங்குக" என்ற சொற்களைப் பொறிக்குமாறு ஏற்பாடு செய்துவிட்டுக் குடும்ப வழக்குரைஞரிடம் சென்றாள். அவரிடமிருந்து அவள் செல்வக் கணவன் ஒரு செல்லாத காசைக் கூடத் தனக்கு வைத்துவிட்டுப் போகவில்லை என்பதைக் கேட்டுச் சினமுற்றாள். உடனே அவனுடைய கல்லறைக்கு விரைந்து சென்று, "அந்தச் சொற்களைப் பொறிக்க வேண்டாம்" என்று கல் தச்சர் பாற் கத்தினாள்.

"மன்னிக்க வேண்டும் அம்மா. காலந் தாழ்ந்து விட்டது. நீங்கள் முன் குறிப்பிட்டபடியே எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றுவிட்டன" என்றார் தச்சர்.

"அப்படியானால் அந்தச் சொற்களின் பின்னால் "நான் உங்களுடன் வந்து சேரும் வரை" என்று சேர்த்து விடுங்கள்" என்றாள்.

* * *

மருத்துவர் பொறுப்பு!

மன நோயாளி ஒருவர் மருத்துவரிடம் சென்று, "ஐயா! சிற்சில பொழுது என்னையே கொன்று கொள்ள வேண்டும் என்ற உணர்வு எனக்கேற்படுகின்றது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம். அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள்" என்று மருத்துவர் அமைதியாகக் கூறினார்.

* * *

இருவகைச் சமையல்!

புதிதாக வேலை தேடிவந்த சமையற்காரியை வீட்டுத் தலைவி "உனக்கு உண்மையிலேயே நன்றாகச் சமைக்கத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"ஆம் அம்மா. இரண்டு வகைச் சமையலையும் நன்றாகச் சமைப்பேன்"

"இரண்டு வகையா? அப்படியென்றால்......?"

"வீட்டுக்கு மீண்டும் மீண்டும் வரவேண்டும் என்பவர்களுக்காக ஒரு வகையும், ஒரு முறை வந்தவர் பிறகு இந்த வீட்டுப் பக்கம் திரும்பியே பார்க்கக்கூடாது என்பதற்காக ஒரு வகையும்" என்று விளக்கினாள்.

* * *

ஒத்திகை!

ஒரு மருத்துவ மனையின் நெருக்கடி நிலைமைப் பகுதியை நோக்கி மிக விரைவாக ஒரு சிற்றுந்து வந்து நின்றது. ஓரிளைஞன் பரபரப்போடு வண்டியினின்று குதித்து ஓ ர டி யி ல் மூன்று படிகளைத் தாண்டி உள்ளே சென்றான்.

"என் மனைவி குழந்தை பெறவிருக்கின்றாள்" என்றான் பரபரப்புடன்.

"கொண்டு வாருங்கள் உள்ளே"

"இல்லை, அவள் குழந்தை பெறுவதற்கு இன்னும் ஒரு திங்கள் ஆகும். அப்போது அவளைக் கொணர்ந்து இங்குச் சேர்ப்பதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பதைக் கணக்கிட்டுப் பார்க்கிறேன்" என்றான்.

ஆங்கில மொழியாக்கம்

Refrain From Evil Deeds.

Gentlemen, O, gentlemen!
With silver hair like fish - bones small,
And wrinkled cheeks, and fruitless age
Certainly you will repent
When the grim God of Death does strike at you.
So, hear me, even if you are n't
Capable of doing good
Refrain from evil deeds
For that's the way that Pleases all
And leads you on to righteous ness!

PURAM 195

அல்லது செய்தல் ஓம்புமின்.

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கருந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.

புறநானூறு 195.
நரிவெரூஉத்தலையார் பாடியது.

ஆங்கில மொழியாக்கம்: ம. இலெ. தங்கப்பா.

உடுக்கள்.

(Stars.)

-●-

வானியலறிவு விரிவடையாத முன்னுளில், இரவுக் காலத்தில் விண்ணில் தெரியும் கோடிக் கணக்கான விண் மீன்களை, மாந்தன் வானில் பொருத்தி வைக்கப் பெற்ற ஒளிப் புள்ளிகள் என்றும், அவை ஒவ்வொன்றும் ஒரே இடைத் தொலைவில் இருப்பதாகவும் தவருக எண்ணி வந்தான். உடுக்களைப் பற்றிய அகப்புற அறிவு செம்மையாக அக்காலத்து மாந்தனுக்கு வாய்க்கவில்லை யாயினும், அவற்றின் இயக்கங்களைப் பற்றி ஓரளவு அறிந்திருந்தான். அவற்றைக் கொண்டு இராக் காலங்களில் நேரங்களைக் கணக்கிட்டான். கப்பல்களில் செல்வோருக்கு அந்நேர அளவைகள் பெரிதும் உதவின. ஏறத்தாழ பதினேழு பதினெட்டாம் நூற்றுண்டிலேயே விண்ணியலறிவு பற்றி விரிவாக ஆராயத் தொடங்கினர்.

உடுக்களைப் பற்றி முதலில் ஆய்ந்தவர் **வில்லியம் எர்சல்** (William Hershel) என்பராவர். இவருக்குப் பின் இவர் மகன் **சான் எர்சலும், சுட்ரூவ்** (Struve), **பெசல்** (Bessal, **பர்.சேப்லி** (Dr Shapley), என்பாரும் தொடர்ந்து உடுக்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

உடுக்கள் நாம் வாழும் உலகத்தினின்று பல கோடிக்கணக்கான கற்களுக்கு அப்பாலிருப்பன வாகலின் அவற்றின் இயக்கங்களை நாம் எளிதில் அறிதல் முடியாது. பொதுவாக உடுக்களுக்கு இரண்டு வகையான இயக்கங்கள் உண்டு. ஒன்று ஒவ்வொன்றின் தனித்த இயக்கம். இரண்டு அவற்றின் தொகுதி இயக்கம். இவையன்றி வேறு இயக்கங்களும் உண்டு.

இவற்றிற்கும் நம் நிலவுருண்டைக்கும்-உள்ள தொலைவைக் கணிக்க அறிவியலறிஞர் இரு அளவீடுகளைக்கையாள்கின்றனர். கதிரவனுக்கும் நிலத்திற்கும் உள்ள இடையீட்டுத் தொலைவு ஒன்பது கோடியே முப்பது இலக்கம் கற்கள் ஆகும். அதனுல் அத்தொலைவையே ஓரளவாகக் கொண்டனர். இதை விண்ணி

யல் அலகு (Astronomical unit) என்பர். இவ்வளவைக் கொண்டு உடுக்கள் உள்ள தொலைவை அளந்தறிவதில் குழப்ப மேற்படும். அதுவுமன்றி இவ்வலகும் சிறியது. ஆதலின் வேறோர் அலகைக் கையாண்டனர்.

ஒளியானது ஒரு நொடிக்கு இலக்கத்து எண்பத்தாறுயிரம் கற்கள் தொலைவு செல்கின்றது. அது ஓராண்டில் $186000 \times 60 \times 60 \times 24 \times 365$ கற்றொலைவு செல்லும். அந்த அளவுத் தொலைவை ஓர் ஒளியாண்டு (Light Year) என்பர். இந்த அலகைக்கொண்டே உடுக்களுக்கும் நிலத்திற்கும் உள்ள தொலைவைத் தெளிவாக அளந்தறிகின்றனர். இவ்விரு அலகு களாலன்றி வேறு வகையாகவும் உடுக்களின் தொலைவைக் கணிக்கின்றனர்.

விண்ணகத்தில் உடுக்களெல்லாம் தனித்தனியாக இல்லா மல், கூட்டங் கூட்டமாக அமைந்துள்ளன. இரவில் தெரியும் பால் வெளி மண்டிலம் அத்தகையதே! அம்மண்டிலத்தின் ஒரு மிகச்சிறிய புள்ளியும் ஒரு மிகப் பெரிய விண்மீனே! இவ்வுடுக் கள் அமைந்த ஒளிப் பட்டைகள் இப்புடவி (Universe) எங்கும் கோடிக்கணக்காக அமைந்துள்ளன. ஒவ்வொரு பட்டையிலும் எண்ணத் தொலையா உடுக்கள் கூட்டம் கூட்டமாக அடங்கி யுள்ளன. இவ்வொளிப் பட்டைகள் இடையில் அகன்றும் இரு முனைகளிலும் குறுகியும் அமைந்துள்ளன. இவ்வொளிப் பட்டையை ஆங்கிலத்தில் Galaxy என்று கூறுவர். கதிரவன் அமைந்துள்ள ஒளித்திரளில் ஆயிரக்கணக்கான உடுக்கள் உள்ளன. அவற்றில் ஒன்றே நம் கதிரவன் ஆகும். கதிரவனும் ஒரு விண்மீனே! கதிரவன் உள்ள ஒளிப் பட்டையின் விட்டம் ஏறத்தாழ மூன்று இலக்கம் ஒளியாண்டுகள் ஆகும். ஓர் ஒளிப் பட்டையில் பல்லாயிரக் கணக்கான உடுத்தொகுதி கள் உள்ளன. ஒவ்வொரு தொகுதியும் அவ்வொளிப் பட்டை யின் நடுப் புள்ளியைச் சுற்றிச் சுழன்கின்றது. ஒவ்வொரு தொகுதியில் உள்ள விண்மீனும் தானும் சுழல்வதுடன் தன் தொகுதியின் நடுப்புள்ளியையும், தன் ஒளிப்பட்டையின் நடுப் புள்ளியையும் சுற்றிக் கொண்டிருப்பதாக அறிகின்றனர். கதிர வன் இவ்வாறு பால் வெளியின் சுழற்சி நடுவை, நொடிக்கு

இருநூறு கற்கள் விரைவுடன் சுற்றி வருவதாகக் கணக்கிட்டுள்ளனர். இவ்விரைவில் இது அமைந்துள்ள உடுத்தொகுதியின் ஒளிப்பட்டையின் நடுப்புள்ளியை ஒரு முறை சுற்ற இருபது கோடி நூற்றுண்டுகள் ஆகின்றன. இதுவன்றிக் கதிரவன் 'எர்குலிசு' (Hercules) என்ற வேறோர் உடுத்தொகுதியை, நொடிக்குப் பன்னிரண்டு கற்கள் விரைவுடன் சுற்றிவருவதாகக் கணக்கிட்டுள்ளனர்.

கடலில் உள்ள சிறுசிறு திட்டுக்கள் போல் விண்வெளியில் உடுத் தொகுதிகள் அமைந்துள்ளன. இவ்வுடுத் தொகுதிகள் **ஒளிச் சுழல்கள்** (Nebulae) என்றும் அழைக்கப் பெறும். இவை **காரொளிச் சுழல்கள்** (Dark Nebulae), **அகலொளிச்சுழல்கள்** (Diffuse Nebulae), **கோளொளிச் சுழல்கள்** (Planetary Nebulae), **சுற்றொளிச் சுழல்கள்** (Spiral Nebulae) எனப் பல வகைப்படும். ஒவ்வோர் ஒளிச்சுழலிலும் பல்லாயிரக் கணக்கான உடுக்கள் கூட்டமும், ஒளி முகில்களும், பூத உடுக்களும் வேறு வகையான விண்மீன் பிரிவுகளும் அடங்கியுள்ளன.

நாம் வாழும் நில மண்டிலத்துக்கு மிகமிக நெருங்கியுள்ள உடுக்கள் கூட்டம் ஏறத்தாழ இருபதினுயிரம் ஒளியாண்டுத் தொலைவிலும், மிகத் தொலைவில் உள்ள உடுக்கள் கூட்டம் இரண்டு இலக்கம் ஒளியாண்டுத் தொலைவிலும் உள்ளனவென்று கணக்கிட்டுள்ளனர்.

பொதுவாக உடுக்களிலிருந்து நமக்கு வருகின்ற ஒளியைக் கொண்டும், அதன் நிறமாலையைக் கொண்டும் அவை நம் நில வுலகத்தினின்று இருக்கும் தொலைவைக் கண்டறிகின்றனர்.

உடுக்களின் அகப்புற, ஒளி வெப்ப நிலைகளைக் கொண்டு அவற்றை ஏழு வகைப் படுத்தியுள்ளனர். அப்பிரிவுகளை ஆங்கில எழுத்துக்களான B, A, F, G, K M, O என்பவற்றில் குறிக்கின்றனர்.

முதல் பிரிவு (B): இப்பிரிவில் உள்ள உடுக்கள் நீலம் கலந்த வெண்மையான ஒளியொடு சுடர்விடுகின்றன. இவற்றின்

மேற்பரப்பின் வெப்பம் ஏறத்தாழ 20,000 பாகை சென்டிகிரேடு ஆகும்.

2-ஆம் பிரிவு A : இப்பிரிவு உடுக்கள் வெண்மஞ்சள் ஒளியொடு சுடர்வன. இவற்றின் மேற்புற வெப்பநிலை ஏறத்தாழ 14000 பாகை சென்டிகிரேடு ஆகும்.

3-ஆம் பிரிவு F : இப்பிரிவில் உள்ள விண்மீன்கள் கடு மஞ்சள் கலந்த வெண்மை ஒளியொடு திகழ்வன. இவற்றின் வெப்பநிலை ஏறத்தாழ 7000 பாகை செ. கி. ஆகும்.

4-ஆம் புரிவு G : இப்பிரிவில் உள்ள உடுக்கள் மஞ்சள் வண்ண ஒளியுடையன. இவற்றின் மேற்பரப்பின் வெப்பநிலை ஏறத்தாழ 6000 பாகை செ. கி. ஆகும்.

5-ஆம் பிரிவு K : இவை துல்லியமான நல்ல மஞ்சள் வண்ணத்தில் சுடர்வன. இவற்றின் மேற்பரப்பின் வெப்பநிலை ஏறத்தாழ 4000 பாகை செ. கி. ஆகும்.

6-ஆம் பிரிவு M : இவை சிவப்பாகச் சுடர் தருகின்றன. இவற்றின் வெப்பநிலை ஏறத்தாழ 3000 பாகை செ. கி. ஆகும்.

7-ஆம் பிரிவு O : இப்பிரிவு உடுக்கள் மிகவும் வெண்மையாகச் சுடர் விடுவன. இவற்றின் வெப்பநிலை 50,000 பாகை செ. கி. வரை இருக்கலாகும்.

பொதுவாக உடுக்களில் பெரும்பகுதி 10,000 பாகை செ.கி. வெப்பநிலையிலேயே இருக்கின்றதாக ஆர்வார்டு (Harvard) வாணய்வுக் கூடம் வெளியிட்ட பட்டியலினின்று அறிகின்றோம்.

விண்மீன்களில் இரட்டை விண்மீன்கள் என்றொரு வகையுண்டு. அவை ஒன்றையொன்று சுற்றிக் கொண்டிருக்கும். இவற்றில் ஒன்று நல்ல ஒளியுடனும் மற்றையது சிறிது மங்கிய ஒளியுடனும் காணப்பெறும். ஒளிமிகுந்த உடுவுக்கு முதல் உடு (Primary Star) என்று பெயர். அதைச்சுற்றியே மற்றொன்று சுழலும்.

நமக்கு மிகவும் அண்மையில் உள்ள விண்மீன் கதிரவனே ஆகும். இதனின்று நம் நிலவுலகம் நொடிக்கு நாற்பது இலக்கம் கோடியே கோடி குதிரை விசைத்திறனைப் பெற்று வருவதாகக் கணக்கிட்டுள்ளனர். கதிரவன் உள்ளிட்ட எல்லா உடுக்களும் காற்றுப் பந்துகளே!

உடுக்களின் உட்புறத்துப் பல்வேறு வெப்ப நிலைகள் உள்ளன. கதிரவனின் மேற்பரப்பில் ஒவ்வொரு மூவடிப் பெருக்கத்தினின்றும் எழுபதினாயிரம் குதிரை விசைத்திறன் வெளிப்படுவதாகக் கணக்கிட்டுள்ளனர். இவ்வாறு உடுக்கள் எல்லாம் வெளியிடும் ஆற்றல் விண்வெளியில் எங்குப் போய் ஒடுங்குகின்றது என்பதை இன்னும் எவரும் கண்டுபிடிக்க வில்லை.

தொடக்கக் காலத்தில் உடுக்கள் சிவப்பு ஒளியுடனிருந்து, பின் காலம் செல்லச் செல்ல நீல ஒளியுடன் சுடர்வதாகக் குறிப்பிட்டுள்ளனர். அவை ஒளி குறைந்து மங்கிப் போகும் நாளும் உண்டு. நம் கதிரவன் ஒளி குன்றிப் போக இன்னும் கோடிக் கணக்கான ஆண்டுகள் பிடிக்குமாம். உடுக்களைப் பற்றி நாம் இன்னும் அறியத்தக்கவை மிகுதியாக வுள்ளன. ○

தமிழ் மொழியின் சொற்சிறப்பு:

காற்று.

வேற்றலம்	—	'வாதம்'
வளி	—	Wind
சூறுவளி	—	Tempest
சுழல்	—	Whirl Wind
காற்று	—	Gas
அன்றமை	—	Air
ஆவி	—	Spirit; Vapour
வெம்பாவி	—	Mist
நீராவி	—	Steam
புயல்	—	Cyclone
உயிர்	—	Life
கொண்டல்	—	கிழக்கினின்று வீசும் மழைக்காற்று.
தென்றல்	—	தெற்கினின்று வீசும் இனிய மென் காற்று.
கோடை	—	மேற்கினின்று வீசும் வெப்பக் காற்று.
வாடை	—	வடக்கினின்று வீசும் குளிர் காற்று.

— ஞா. தே.

வாராதா மீண்டும்?

* * *

சுட்டெரிக்கும் கோடையிலே மாந்தோப்பில் நண்பர்
சூழலொடும் விளையாடி மனமகிழ்வேன்; மாங்காய்,
திட்டமிட்டுப் பறித்துண்பேன்; ஏரிக்குச் சென்று
சின்னதொரு மீன்போல நீந்திடுவேன்; வானில்
பட்டமதை ஏறவிட்டுத் துள்ளிடுவேன்; வானில்
படர்ந்துயர்ந்த கிளையேறி விழுதுபற்றித் தரையைத்
தொட்டிடுவேன் ஆஆஆ! அவ்விளமைப் பருவம்
துடிக்கின்ற என்றனக்கே வாராதா மீண்டும்?

நெல்வயலில், வயற்கப்பால் குன்றுகளில், ஆங்கே
நெளிந்தோடும் ஆற்றினில்,பூந் தோட்டத்தில் பச்சைப்
புல்தரையில், பெருங்குளத்து மேடுகளில் பொங்கும்
புதுப்புனலில் இங்கெல்லாம் நான்சுற்றித் திரிந்த
நல்லிளமை நாட்களெல்லாம் மனக்கண்ணின் முன்னே
நடப்பதைப்போல் காண்கின்றேன்; அந்நிலையை வாயால்
சொல்லிடினும் நிறைவின்றி உழல்கின்றேன்; அந்தத்
துள்ளுமிளந் தேம்பருவம் வாராதா மீண்டும்?

ஊரடுத்தே இருக்கின்ற கேணிகளி லெல்லாம்
உயரத்தில் நின்றபடி குதித்தெழுவேன்; தென்றல்
நீரெடுத்துத் தெளிப்பதைப்போல் குளிர்வீசக் காவில்
நெடுநேரம் திரிந்துவிளை யாடிஉடல் சோர்ந்தால்,
வேரெடுத்த கிழங்குகளை, நுங்கை,இள நீரை
மிகஉண்டு களித்திடுவேன் நறுங்கனிகள் பலவின்
சாறெடுத்துக் குடிப்பதைப்போல் இனிக்குமந்த இளமைத்
தளிர்ப்பருவம் என்றனக்கே வாராதா மீண்டும்?

முதலியார்பேட்டை. நா. பெரியசாமி.

மணிமொழிமாலை

காலம் போம்; சொல் நிற்கும்.
கப்பல் போம்; துறை நிற்கும்.

—○—

பூ மலர்ந்து கெட்டது;
வாய் விரிந்து கெட்டது!

—○—

மூத்தோர் சொல்லும் முழு நெல்லிக் காயும்,
முன் புளிக்கும்; பின் இனிக்கும்!

—○—

முற்ற நனைந்தவனுக்கு ஈரமில்லை;
முழுச் சோம்பேறிக்கு நேரமில்லை!

— **தமிழ்ப் பழமொழிகள்.**

சின முற்றிருக்கையில் எந்த மடலுக்கும் விடையெழுதாதே.

—○—

கொடுமையைப் பார்க்காதே! கொடுமையைக் கேட்காதே!
கொடுமையைப் பேசாதே! — **சீனப் பழமொழிகள்.**

—○—

கடன் கொடுப்பவனுக்கு வாங்கினவன் வேலைக்காரன்!

—○—

ஒரு பையன் இருபது பெண்களுக்கு நேர்

—○—

கண்ணாடி மாளிகையில் குடியிருப்பவன் கல்லெறிய மாட்டான்! — **ஆங்கிலப் பழமொழிகள்.**

—○—

குற்றத்தை ஒப்புக் கொள்ளுதல் உயிரின் உயர்ந்த செயல்.
— **இசுக்காத்துலாந்துப் பழமொழி.**

—○—

ஒருவனுக்கு எங்கு உண்மையிலேயே வாழ்விருக்கின்றதோ அதுவே அவனுடைய நாடு. — **இலத்தீன் பழமொழி.**

—○—

குற்றத்தால் எவன் ஊதியமடைகிறானோ அவனே குற்றவாளி.

ஒரு நல்ல கணவன் செவிடாகவும், ஒரு நல்ல மனைவி குருடாகவும் இருக்க வேண்டும்! — **பிரெஞ்சுப் பழமொழிகள்.**

—○—

வசைகள் ஊர்வலத்தைப் போன்றவை; எங்கிருந்து புறப் படுகின்றனவோ, அங்கேயே திரும்பி வருகின்றன.

— **இத்தாலியப் பழமொழி.**

—○—

கண்கள் தம்மையே நம்புகின்றன;
காதுகள் மட்டும் பிறரை நம்புகின்றன!

—○—

ஓர் இணை எருதுகள் செய்வதை விட மனைவியின் கை விரல்கள் மிகுதியாகச் செயல் படுகின்றன.

— **செருமானியப் பழமொழிகள்.**

—○—

பழக்கம் முதலில் சிலந்தி வலைபோல் மெல்லியதாக இருந்து பின் கப்பலைக் கட்டும் இரும்புக் கம்பிபோல் மாறுகின்றது.

— **இசுப்பானியப் பழமொழி.**

—○—

இறைவன் எல்லா நல்ல செயல்களையும் நமக்கு விற்கிறார்; அவற்றிற்கு உழைப்பையே விலையாகப் பெறுகின்றார்.

— **கிரேக்கப் பழமொழி.**

—○—

பணம் பேசத் தொடங்கும்போது, உண்மை ஊமையாகப் போகின்றது. — **உருசியப் பழமொழி.**

—○—

இன்றைக்கு நன்றாக வாழ்! கழிந்த ஒவ்வொரு நாளும் இன்பக் கனவாக நினைவிலிருக்கும்; இனி வருகின்ற ஒவ்வொரு நாளிலும் நம்பிக்கையின் ஒளியிருக்கும்!

— **சமற்கிருதப் பழமொழி.**

தமிழ் மொழியின் சொல் வளம்.

மரக்கிளைப் பிரிவுகள்.

கவை – அடி மரத்தினின்று பிரியும் மாபெருங் கிளை.
கொம்பு அல்லது கொப்பு – கவையின் பிரிவு.
கிளை – கொம்பின் பிரிவு.
சினை – கிளையின் பிரிவு.
போத்து – சினையின் பிரிவு.
குச்சு – போத்தின் பிரிவு.
இணுக்கு – குச்சின் பிரிவு.

— **ஞா. தே.**

வள்ளுவத்தில் தாய்மை.

தாய்மையின் பெருமை அளவிடற்கரியது. மிகவுந் தூய்மை யானது. தாய்மை யன்பினை எடுத்துப் பேசாதாருமிலர்; நூல் களில் எடுத்துப் புகழாதாரும் இலர்.

தாய்மையின் அரவணைப்பில் தவழ்ந்து வளர்ந்த மாந்த இனம் அந் நன்றியை எஞ்ஞான்றும் மறவாது போற்றுகின்றது. ஏதும் அறியாத இளம் பருவத்தே பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி உடலையும் உணர்வையும் ஒருங்கு வளர்த்தது தாய்மை யன்பன்றே! அருள்நிறை துறவியர் முதல் அன்றாட வாழ்க்கைத் தேவையைச் சுட்டிப் பாடும் பாவலர்கள் வரை இத்தாய்மை யைப் புகழ்ந்துள்ளனர். “பால் நினைந் தூட்டும் தாய்” “தாயான ஈசன்” என்று திருவாசகம் புகழும். “என் தாய் தடுத்தாலும் விடேன்” என்பது இக்காலப் பாவலர் முழக்கம். இத்தகைய ஈடும் எடுப்புமில்லாத அன்பின் செல்வத்தை, இருப் பிடத்தை, ஈன்றாளைத் திருவள்ளுவர் குறித்த பெற்றியை இனிக் காண்பாம்.

குமுக வாழ்வினை விளக்குவது பொருட்பால் ஆகும். இப் பகுதி வாழ்வியல் சிக்கல்களனைத்தையும் தீர்த்து வைக்கும் பெரும் பெட்டகமாகும். அரிய பெரிய கருத்துக்களை எளிய இனிய உவமைகளால் விளக்கிக் காட்டுவர் ஆசிரியர். தினை முதல் பனை வரை யுள்ள பொருள்கள், எலி முதல் புலி வரை யுள்ள பொருள்கள் திருவள்ளுவரின் சொற்படு பொருள்களாக மிளிர்கின்றன. அன்றாடும் நாம் காணும் பொருள்களே அவர்தம் கருத்திலிருந்து வருகின்ற பொழுது எத்தனை எத்தனையோ கருத்துக் களைத் தருகின்றன; அறிவிற்கு விருந்தாகின்றன. அவை யனைத்தும் அறிந்தும் உணர்ந்தும் இன்புறத் தக்கன.

பேராசிரியர்.
கு. சுந்தரமூர்த்தி
திருப்பனந்தாள்.

இத்தகைய பொருட் பாலில் தாயினை மூன்றிடத்தில் குறிக் கின்றார் ஆசிரியர். அப்பெருமாட்டியைக் குறிக்குமிடத் தெல் லாம் சிறப்பும்மை கொடுத்துக் குறிக்கின்றார் அவர்.

முதல் இடம்:-

''ஈன்ருள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை''

பிறர் பசியைக் காண்டலே பெருந் துன்பம் ஆகும். அதிலும் தாயின் பசியைக் காணும் நிலை வரின் அதனினும் கொடியது வேறில்லை. அந்நிலை ஒருவனுக்கு வரினும், சான்ருேர் பழித்தற்காம் தீவினைகளைச் செய்தேனும் தன் தாயைப் புறந்தருதல் வேண்டும் என்னும் தீய எண்ணம் தகாது என்கிருர் திருவள்ளுவர்.

தாய் தந்தையர், கற்புடை மனைவி, குழந்தை இவர்கள் பசியால் வருந்தும் பொழுது தீயன பலவும் செய்தாயினும் அவர்களைப் புறந்தருதல் நன்று என்று வட நூல் கூறும். ஆனல் திருக்குறளோ மேற்கூறியவர்களுக்கெல்லாம் தலைமையான ஈன்ற தாய் வருந்தினும் தீயவற்றைச்செய்தல் தகாது என மறுக்கின்றது. ஈன்ற தாய்க்கே இந்நிலை எனில் ஏனையோர் பசியால் வருந்தும் பொழுது தீயன செய்தல் தகாது எனச் சொல்லவும் வேண்டுமோ!

இரண்டாம் இடம்:

''ஈன்ருள் முகத்தேயும் இன்னுதல் என்மற்றுச்
சான்ருேர் முகத்துக் களி''

கள்ளுண்டல் தவறெனக் கூறவந்த ஆசிரியர், கட் காதல் கொண்டொழுகுவார்க்குப் பகைவர் அஞ்சார் என்றும், அவர்க்கு ஒளியிராது என்றும் அவரைச் சான்ருேர்கள் ஒரு பொருளாக மதியார் என்றும் கூறினர். அவற்ருனும் திருந்தாதானை நோக்கி, ''கள் குடிப்பது சான்ருேர்க்கு அருவருப்புத் தரும் என்பது மட்டுமன்று; உன்னை ஈன்ற தாய்க்கும் அருவருப்புத் தரும்; அவளே அருவருப்பாள் எனின் பிறர் தம் நிலையைச் சொல்ல வேண்டுவதில்லையே'' என்று மேலும் இக்குறளில் கூறித் தெருட்டுகின்ருர் ஆசிரியர். தம் பிள்ளை எவை எவை செய்யினும் அவற்றையெல்லாம் பொறுப்பாள் தாய். தந்தை சிறிது தவறு செய்யினும் ஒறுப்பான். இது உலகியல் நிலை. ஆனல் கள்ளுண்டல் ஆகிய தவறு தாய்க்கும் அருவருப்புத் தருவதாம் என அதனது தீமையை இக்குறளில் விளக்குகின்ருர் ஆசிரியர்.

மூன்றுமிடம்:

''அறஞ்சாரா நல்குர(வு) ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்''

வறுமையில் இருவகை யுண்டு. ஒன்று என்றுமே வறுமையா யிருக்கும் நிலை. பிறிதொன்று ஒரு காலத்தில் வாழ்ந்து பிறிதொரு காலத்தில் தாழ்ந்து வாழும் நிலை. இவ்விரு நிலையுள் பின்னையது முன்னையதைக் காட்டினும் கொடியது. முன்னையது இன்பமே காணாதது. பின்னையது முன்னர் இன்பம் துய்த்துப் பின்னர் துன்பத்தைக் காண்பது. இந்நிலை ஏற்படுதற்குப் பற் பல பொருட்டுகள் இருக்கலாம். பெருஞ் செல்வன் ஒருவன் பிறர்க்கெனவே வாழ்ந்து தன் செல்வத்தைத் தொலைத்திருக்க லாம். அல்லது இருமனப் பெண்டிர், கள், கவறு போன்ற நெறியல்லா வழிச் சென்று அவ்வகையில் தொலைத்திருக்கலாம். இவ்விருநிலைகளில் முன்னையது உலகினரால் பழிக்கப்படாத தாகும். ''நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு, கெடுவாக வையா துலகம்'' ''ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன், விற்றுக்கோள் தக்க துடைத்து.''என்பன இதற்குச் சான்று. பின்னையது பலராலும் தூற்றப்படுவதாகும். இந்நிலைக்குக் கோவலன் வாழ்க்கையே தக்க எடுத்துக் காட்டா கும். குலந்தருவான் பொருளை அறஞ்சாரா வழியில் தொலைத்த தால்தான் இரவு இரவாகக் குலப் பிறப்பாட்டியாம் கற்புடை நங்கையைக் கோவலன் அழைத்துச் செல்ல நேர்கின்றது. அவனது வறுமை ஒப்புரவினால் வந்திருக்குமாயின் தானும் உவந்திருக்கலாம்; மனைவியும் ஒருங்கு வாழ்ந்திருப்பள். மாசாத்துவனும் மாநாய்கனும் இடுக்கண்கால் கொண்டிட ஊன்றி உதவியிருப்பர். ஒரு குறைமட்டும் இருந்திருக்கும். நமக்கு அவர்கள் வாழ்ந்திருந்த நிலை தெரியாமலும் சிலம்புச் செல்வம் கிடைக்காமலும் போயிருக்கும்.

''தூமொழி மடமான்
இரக்கம் இன்மையன்றோ இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகு கின் றதுவே''

எனக் கம்பர் கூறுமாப் போல, சிலம்புச் செல்வம் நமக்குக் கிடைப்பதற்காகவோ என்னவோ அறஞ்சாரா நல்குரவு கோவலன் வாழ்வில் பொருந்தி வருகின்றது!

சிறு கதை.

நினைவின் நிழல்.

"செம்பியன்"

பெண்ணையாறு இரு கூருகப் பிரிந்து கடலில் கலக்கு மிடத்தே பொலிவுற அமைந்திருக்கின்றது கடலூர் நகரம். வற்ருத ஆறெனப் பெயரெடுத்து, அந் நகரை வளங் கொழிக்கச் செய்யும் பேறு அதற்கில்லையாயினும், அதைத் தன்னிரு கைக ளாலும் அணைத்துச் சென்று, கடலுடன் தொடர்பு கொள்ளும் கவின் மிகு காட்சியை அளித்துச் சிறப்புப் பெற்றுள்ளது.

விடுமுறை நாட்களில் மாலைப் பொழுதில் நகரின் தென்பால் செல்கின்ற கடில ஆற்றின் தென்புறம் விரவிய பெரு மணற் பரப்பில் அமர்ந்து இயற்கையன்னையின் எழில் மிகு காட்சியைக் கண்டு களிப்பது என் வழக்கம். மணற் பரப்பை யொட்டி அடர்ந்து வளர்ந்த மரங்கள் செறிந்த பெரிய தோப்பு ஒன்றுண்டு. பசுமையான மூங்கிற் புதர்கள் அதற்கு வேலியாக அமைந் திருந்தன.

ஒரு நாள் மாலையில் அலுவல் மிகுதியால் ஏற்பட்ட களைப் பைப் போக்க அமைதியை விரும்பி அம் மணற் பரப்பை நாடிச்

முன்பக்கத் தொடர்ச்சி.

எனவே நல்குரவிலும் அறஞ் சார்ந்த நல்குரவு போற்றப் படும் என்பதும், அறஞ்சாரா நல்குரவே தாயும் கடிந்து ஒதுக்கும் இழிநிலை யாகின்றது என்பதும் நமக்கு இக்குறளால் விளங்கு கின்றது.

இங்ஙனம் அறத்தொடு பொருந்தாது நிலையில் வரும் வறு மையைப் பெற்ற தாயும் பேணுள் என இக்குறளில் கூறுகின்ருர் ஆசிரியர்.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே''

சென்றேன். பசுமை தோய்ந்த மரங்களினூடே வீசிய குளிர்மை மிகுந்த இளந் தென்றல் இனிமை தந்தது. மேல் துண்டை எடுத்துக் கீழே விரித்து, அதன் மீது சாய்ந்து படுத்தேன். அருகிலிருந்த மூங்கிற் புதர்களில் பறவை யினங்கள் தத்தம் பேடுகளுடன் கூடிக் குலவி மகிழும் காட்சியைக் கண்டவாறும் அவற்றால் எழுப்பப்பட்ட இனிய குரலொலிகளின் இசையை மாந்தியவாறும் அவை வாழுகின்ற கற்பனை உலகை நோக்கி என் எண்ணம் நடையிட்டது. களைப்பின் மிகுதியால் என்விழி இமைகள் கனத்தன.

○ ○ ○

மாந்தர் எளிதில் நுழையவியலாத ஒரு பேரடவி. இயற்கையின் முழுமை பெற்ற, எழில் மிகு காட்சிகளின் நடுவே நான் மட்டும் தனித்துச் சென்று கொண்டிருந்தேன். அடர்ந்து நெடிதுயர்ந்த தேக்கு மரங்கள் நிறைந்த இடங்களிலெல்லாம் கதிரவனின் ஒளிக் கதிர்கள் நில மடந்தையைத் தழுவ இயலவில்லை. எங்கு நோக்கினும் பசுமை மிகுந்த தோற்றமும், குளிர்மையின் ஆட்சியுமே குடி கொண்டிருந்தன.

நகரத்தின் அமைதியற்ற சூழ்நிலையிலிருந்து அங்குச் செல்வது பேரமைதிகொண்ட ஒரு புதிய உலகத்தில் புகுவதுபோன்ற உணர்வு தருகின்றது. அவ்வமைதியின் உறக்கத்தைக் கலைப்பது போன்று வண்டுகளின் இன்னிசையும், சிறு புள்ளினங்களின் குரலொலிகளும் போட்டியிடுகின்றன. சற்றுத் தொலைவில் அக்காட்டிற்கு அரணாக அமைந்தது போன்று ஒரு மலையும் அதனின்று விழுகின்ற சிற்றருவி ஒன்றும் காணப்படுகின்றன. மெதுவாக நடந்து அருவியை அடுத்துள்ள புல் வெளியை அடைந்தேன். முழங்கால் அளவிற்கு மண்டிக் கிடந்த புல்வெளிகளினூடே அருவியின் ஒரு பக்கத்தில் அமைந்திருந்த பாறைகளை அணுகினேன். நீரினின்று வெளிப் போந்து பாறைகளின் ஓரத்தில் கதிரவன் வெப்பத்தில் திளைத்திருந்த நீர்ப் பாம்புகள், தவளைகள், ஆமைகள் முதலியன நீர்க்குள் சென்றொளிந்தன. எதிர்க் கரையில் மான் கூட்டம் ஒன்று நீரருந்தி இளைப்பாறிக் கொண்டிருந்தது. நீர் வேட்கை மிகுதியால் நானும் நீரிலிறங்கிப் பளிங்கு போன்று ஓடிக் கொண்டிருந்த குளிர்ந்த நீரை, இரு கைகளாலும் அள்ளிப் பருகினேன். இயற்கை யன்னையின்

பேராற்றலின் விளைவை எண்ணி வியந்து கொண்டே மீண்டும் நடந்து திரிந்தேன். களைத்துக் கால்கள் சோர்ந்து, பரந்த மரங்களின் கீழே தண்ணிய நிழற் பரப்பில் மெத்தென்ற புற் செறிவின்மீது அமர்ந்தேன். அமைதி தவழ்ந்த அச் சூழ்நிலையில் யாரோ இருவர் பேசுகின்ற ஒலி, என் செவிகட்கு எட்டியது. ஒலிவந்த மருங்கு கூர்ந்து நோக்கினேன். பேச்சுகள் தெளிவாகக் கேட்டன.

''நகரத்தில் இரண்டாண்டுகள் கழித்தாயே, அங்கு உன் வாழ்க்கை எவ்வாறிருந்தது என்பதைக் கொஞ்சம் கூறுகின்றாயா?''

''என்னைப் பொறுத்த மட்டில் நகர வாழ்க்கையில் எல்லாத் தேவைகளிருந்தும், சிறை வாழ்க்கையாகத்தான் இருந்தது. இங்கு வாழ்வது போன்று, உரிமை, கட்டுப் பாடின்மை, மன அமைதி, உள்ள நிறைவு முதலியன அங்கு இல்லை. எந்நேரமும் உங்களை எப்பொழுது காண்பேன் என்ற ஏக்கம்தான் குடி கொண்டிருந்தது. ஆனால் எப்படியும் இங்கு வந்து மீண்டும் உங்களுடன் வாழ்வேன் என்ற நம்பிக்கை எனக்கு வலிவாக இருந்தமையால்தான் அந்தச்சூழலின் அரிப்பினால் தேய்ந்து மீளாமல் மீண்டும் வந்தேன்.''

''அங்கு உன்னை வளர்த்தவர்களைப் பற்றியும், அவர்கள் வாழ்க்கைமுறை முதலியவை பற்றியும் சிறிது சொல்; அதையும் கேட்போம்''

''நான்கு ஐந்தாண்டுகளுக்கு முன்னர் நீங்கள் உணர்ந்து, அறிந்து வந்து எனக்குக் கூறியதை விட மிகுதியாகவே அவர்கள் வாழ்க்கை, அழிவு வழியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைத்தான் கண்டேன். அவர்கள் நாகரிக வாழ்வு வாழ்வதாகத் தருக்கித் திரிகின்றனர்; உடலைப் பலவகை வண்ண உடைகளாலும் விலையுயர்ந்த அணிகளாலும் அழகு செய்வதுதான் நாகரிகம் என்று கருதுகின்றனர். தங்கள் அறிவாற்றல் பெருகவில்லையே, உள்ளம் விரிவடையவில்லையே என்று ஒருவரும் நினைப்பது இல்லை. அறிவற்ற கீழ் மகன்கூடப் படித்துப் பட்டம் பெற்றவர்களைப் போன்றும், செல்வம் உடைய

வர் உடுக்கின்றது போலும் உடையுடுத்தித் தோற்றமளிக்க முயல்கின்றனே யொழிய உண்மையான அறிவை வளர்க்க முற்படுகின்றனில்லை.

செல்வர்கள் உழைப்பின்றி வாழ்வதுதான் நாகரிகம் என்று கருதி வாழ்கின்றனர். அவர்களைப் பார்த்துச் செல்வத்தில் குறைந்த மற்றவர்களும் உழைத்தல் இழிவு என்று கருதிப் போலி வாழ்வு வாழ்ந்து தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கின்றனர். இதன் விளைவாக உழைக்கின்ற உழைப்பாளிகள் மட்டும் உழைத்து உழைத்து உருமாறித் தேய்ந்து போகின்றனர். இந்நிலையில் அரசியலார் நாட்டின் முன்னேற்றம் காண முயல்வது எவ்வாறு முடியும்?

பொதுவாகவே பிறர்மீது அன்பு செலுத்தி இன்ப வாழ்வு நடத்தும் தன்மை அருகிவிட்டது. வலியோர் எளியோர்க்கும் செல்வர் ஏழைக்கும் இரங்குகின்ற பான்மையும் குன்றி வருகின்றது. 'அன்பே தெய்வம்', 'அருளே கடவுள்' என்றெல்லாம் வாயளவில் கூறுகின்றனர். ஆனால் ஒருவர்மீது ஒருவர் பொறாமைக் கண் கொண்டு நோக்குகின்றனர்; காழ்ப்புக் கொள்ளுகின்றனர்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பெற்றியராகித் திரிகின்றனர். வெள்ளை மனம் கொண்டோரைக் குள்ள மனம் கொண்டோர் ஏய்த்துப் பிழைக்கின்றனர். ஏமாற்றி வாழ்வதையே தொழிலாகக் கொண்டோர் பெருகுகின்றனர். தன்னலக்காரப் பேய்களையும், பொறாமைக் கழுகுகளையும், கள்ள மனக் குள்ள நரிகளையும், பொய்யர், சூதர், கொலைகாரர் முதலியோரையும் மிகுதியாகக் காண முடிகின்றது. அன்புள்ளம் பூண்டு, தண்ணொளி விரவிய முகத்துடன் எளியோர்க்கு இரங்கி அருள் செய்கின்ற உண்மை மாந்தர் எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கி வாழ்கின்றனர்.

அறிவானும், திறமையானும், சூழ்ச்சியாலும், சூழ்நிலைகளினாலும், தன்னலம் கருதி வாழும் அவர்களில் சிலர் எல்லார்க்கும் உரிய பொருள்களைத் தாம் மட்டுமே சேர்த்துக் குவித்துக் கொள்கின்றனர். அதன் பயனாகப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. எத்துறையை நோக்கினும் மேடு பள்ளங்கள் மிகுந்து காணப்

படுகின்றன. மேடு மேலும் உயர்கின்றது; பள்ளம் இன்னும் தாழ்கின்றது. உண்மையறிந்து, உண்மை வழி நடந்து உண்மை வாழ்வு நடத்தவியலாமல் உழல்கின்ற காட்சியைத் தான் எங்கும் காண முடிகின்றது. இவர்களைப் பார்க்கினும் நம்முடைய நிலை எவ்வளவோ மேல் என்று தோன்றுகிறது. அமைதியற்ற மாந்தனுகப் பிறந்து வருந்தி உழன்று மடிவதைக் காட்டிலும் நம்போல்வார்வாழ்வு சிறந்ததென்று கருதுகின்றேன். இங்கு நம்மை வறுமை அணுகுவதில்லை; நோய், துன்பம் செய்வது இல்லை. செல்வர் – ஏழை என்ற பாகுபாடு நம்மில் இல்லை. பற்றுக்குறை நம்மிடம் நாட முடியாது. தன்னலம் இல்லை. அன்புள்ளம் உண்டு........''

இவ்வளவையும் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த என்னல் மேலும் அமைதியாயிருக்க இயலவில்லை. ''ஏ!வாயாடிக் கிளியே, எங்களில் தீயோரைப் பார்த்து எங்களினத்தின் மீதே பெரும் பழி சுமத்துகின்றுயே, நல்லவர்கள் உன் கண்களில் படவில்லையா?''–என்று கத்தினேன். அவ்வளவு தான் அந்த மரக் கிளையில் அமர்ந்திருந்த இரு கிளிகளும் ''ஏதேது இந்தப் பொல்லாத மாந்தர் இங்கும் வந்து விட்டனரே''என்று கூறிக் கொண்டே பறந்து விட்டன.

○ ○ ○

அருகிலிருந்த கோயிலின் திருவிழாவிற்காக வெடிக்கப் பெற்ற வெடியின் ஒலி என்னைத் திடுக்கிட்டெழச் செய்தது. நல்ல தூக்கம்! அடி வானத்தில் தோன்றிய நிலவு சற்று உயரத்தில் தெரிந்தது. தென்றலின் அணைப்புக் கிலக்காகிக் கிடந்த உடல் குளிர்ந்திருந்தது. எங்கும் குளிர்மையின் ஆட்சி குடிகொண்டிருந்தது. அதுபோலவே என் உள்ளமும் குளிர்ந்திருந்தது. விரைந்து நடந்து வீட்டை யடைந்தேன்.

- திருமண வாழ்த்து -

நம் பெங்களூர் முகவர், திரு. பூ. சா. ஆதிமூலம் அவர்கட்கும், திருவாட்டி: சாந்தியம்மைக்கும் கடந்த மாசி 14-இல் பெங்களூரில் திருமணம் இனிதே நடைபெற்றது. மணமக்கட்கு எம் வாழ்த்துகள் உரியவாகுக.

— ஆசிரியர்.

வேலன் சிந்தனைப் பூங்கொத்து - விலை 1-வெள்ளி.

(ஆக்கியோர்: வி. பொ. பழனிவேலன்
வெளியீடு: தமிழ் பாதுகாப்புக் கழகம், அரண்தாங்கி)

இந்நூல் பல தலைப்புகளில் எழுதப்பெற்ற கட்டுரைகளின் தொகுதி. தமிழர்க்கு இன, மொழி உணர்வைத் தூண்டுவனவாகவும் மூடப் பழக்கங்களையும் பொய்மைகளையும் சாடுவனவாகவும் மாணுக்கர்க்கு வாழ்வியல் அறிவுரை கூறுவனவாகவும் அமைந்துள்ளன இக்கட்டுரைகள்.

போலிச் சமயத்தைக் கடிந்து ஒரே யிறை யுணர்வைத் தூண்டலும், பெரியோராய்க் காட்சிதருந் தீயோரைக் கண்டித்தலும், தமிழரின் கடமை யுணர்த்தி, மொழிப்பற்றைக் கிளரச் செய்தலும் தற்காலப் பழக்க வழக்கங்களிலுள்ள சில சீர்கேடுகளை எடுத்துக் காட்டலும் வரவேற்கத் தக்கன.

பேய், புராணம் பற்றிய தவருன கருத்துக்களைக் கடிந்துள்ளமை நன்று. மாணவர் வாழ்வு நலனில் அக்கறை கொண்டு வேண்டாப் பழக்கங்களைக் கடிந்து அவர்க்கு நல்வழி காட்டுகின்ருர். திரைப்படம், புகை பிடித்தல், வெறிதரும் குடிநீர் அருந்தல் போன்றவற்றின் தீமைகளை எடுத்துக் காட்டுகின்ருர்.

ஆசிரியரின் தமிழ் ஆர்வம் பாராட்டற்குரியது. தமிழிற் பிறமொழிச் சொற்கள் கலப்பதன் தீமையை விளக்கித், தமிழ்ப் பற்றினர்போல் உருத்தாங்கித் தமிழ்க்குத் தீங்குபுரியும் போலித் தமிழரின் முகமூடியைக் கிழித்தெறிகின்ருர். தமிழ்ப் பண்பாடும் தமிழர் சிறப்பும் மறைக்கப்படும் நிலைகண்டு கொதித்தெழும் ஆசிரியரின் தமிழ் நெஞ்சும், தமிழினம் பற்றிய உண்மையை நிலை நாட்டுதற்கு அந்நெஞ்சிற் கிளர்ந்தெழும் ஆர்வமும் நூல் முழுவதும் வெளிப்படுகின்றன.

பழந்தமிழரின் ஓரேயிறைக் கொள்கைக்கு இக்காலப் புலவரும் சிலவிடத்துப் பல தெய்வ வழிபாட்டினருமாகிய பாரதியார் தாம் சான்றுகக் கிடைத்தாரோ?

தமிழ் தமியதாகிய ''ழ''கரத்தைப் பெற்றமையானே அப் பெயர் பெற்றதென்ற கருத்துப் பொருத்தமின்று.

தமிழிற் பிற சொற் கலப்பதற்கு, மணம் வேண்டாப் பெண்ணுக்கு வலிந்து மணமகன்தேடும் முயற்சியினை ஒப்புமை காட்டுவது பொருந்தாததுடன், மாற்றுக் கருத்தார்க்கு அஃதொரு பிடியாகப் பயன்படுவதுமாகும்.

பொருளற்ற எதுகை மோனைத் தொடைகள் வேண்டப்படுவன அல்ல. ஆங்காங்குச் சிற் சில சொற் பிழைகளும் உள. உண்மைத் தமிழ்ப்பற்று எதுவென விளக்கிச், சொல்லும் செயலும் வேறுபடல் கூடாதென வலியுறுத்தித், தமிழிற் கலப்புக் கூடாதென அழுத்தமாகக் கூறும் ஆசிரியர் அந்நியர், அற்பம், ஆசை, ஆடம்பரம், ஆதி, இதயம், உச்சரிப்பு, உதாரணம், உபதேசம், கவிதை, காரியம், கேவலம், சமுதாயம், சம்பவித்தல், சிந்தித்தல், செபமாலை, நாதி, நிச்சயம், நீதி, பயம், பரம்பரை, பதவி, பரகதி, பாவி, பாமரர், பேதம், போகி, மதம், மோகம், வரகவி, வாரிசு, விதி, வைபோகம், வேதாந்தம் இன்னும் இவைபோன்ற பற்பல வட சொற்களையும் கலந்தே எழுதியிருப்பது மிக மிக வருந்தத்தக்க நிலையாகும். மறுபதிப்பில் ஆசிரியர் இக்குறையினை அறவே களைய வேண்டுகின்றோம்.

○ ○ ○

அழகப்பா தமிழ்மன்றச் சிறப்பு மலர்

தி.பி. 1993–'94.

அழகப்பா கல்லூரிகள் வட்டம், காரைக்குடி – 3.

அழகப்பா கல்லூரிகளின் பல்துறை மாணவரும், பிற தமிழன்பரும் எழுதிய கட்டுரைகளும் பாடல்களும் மணங்கமழ்கின்றன. கல்லூரி மாணவர்தம் தமிழ் வேட்கையும், பற்றும், தொண்டு புரிய விழையுந் துடிப்பும் நெஞ்சைத் தொடுகின்றன. தமிழ் முழக்கமிடும் இக்காளையர், பட்டம் பெற்று வெளிவந்ததும்

இத் தமிழார்வமெலாம் அடங்கி ஒடுங்கியோ, பிற நலன்கட்காக அதனைப் புறத்தொதுக்கியோ, பயனிலா வாழ்வில் அமிழ்ந்து போகாமல் உண்மைத் தமிழ்த் தொண்டராய் விளங்குவ தொன்றே தமிழ் மன்றத்துக்குப் பெருமைதருவதாகும். இளமைத் துடிப்பினைப் போலவே தமிழ்ப்பற்றும் மங்கி மறையுமாயின் அது எவ்வளவு வருந்தத் தக்கது! நிற்க.

இளநெஞ்சங்களிலெல்லாம் தமிழ்க் குரல் ஒலிக்கையில் அவற்றிற்கு வழிகாட்டியாக விருந்த ஒரு தமிழ் முது நெஞ்சம் மட்டும் இம்மலரில் வேற்றுக்குரலில் ஒலிப்பது இனிய யாழொலி யின் நடுவே இசை வழுவாயிருக்கின்றது. தமிழே உயிராக விருந்த புரட்சிப் பாவலர் தம்நிலை திரிந்து ஐயனாரிதனார்க்கும் தொல்காப்பியர்க்கும் தமக்கும் இழுக்குத் தேடுவார்ப்போல் பாரதப்புகழ் பாடுவது பொருந்தாததா யிருக்கின்றது. 'தமிழியக்கம்' முழங்கிய அத்தமிழேற்றின் உட்கோள் எதுவோ?

''கல்லாடன்''

பேசப்பெரு மொழிக்குப் பெருஞ்செலவு.

தமிழகத்தில் உள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளி லும் மொத்தம் 14,896 மாணவர்கள் வடமொழி (சமற் கிருதம்) படிக்கின்றனர் என்றும், இதற்கென 189 ஆசிரி யர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும், 1961-62-ஆம் ஆண்டில் வடமொழி யாசிரியர்கட்கு உருபா 3,42,728 செலவான தென்றும் கல்வியமைச்சர் திரு. பக்தவத்சலம் தமிழகச் சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்கு விடை யளிக்கையில் கூறினார்.

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் முற்று முதிரா வெற்றுரவார விளையறு மொழியான இந்தி யையும் கற்க வேண்டுமென்பது தென்னாட்டவரை உணர்விலும், செயலிலும் ஒடுக்க வடவர் எடுத்துக் கொள்ளும் முயற்சியே எனக் கருதுவதைத் தவிர வேறெப்படிக் கூறுவது?

இவ்வறியாமைச் செயலை இந்திய நாட்டின் தலைமையமைச் சர் நன்கு அறிந்துதான், "இந்திய அரசின் ஒரே மொழியாக இந்தி மொழியை ஏற்றுக் கொள்ள முடியாது. அது இந்தி பேசாத மக்களின் நலனைக்கெடுக்கும்; வேறுபாடுகளுக்கும் வழி வகுக்கும்"என்று அடிக்கடி நடுவனரசு இந்தி வெறியர்களின் செவிப்பறை அறுந்து போகுமாறு ஓங்கி அறைந்து வருகின்றார்.

வடநாட்டினர் யாவரும் தாங்கள் நன்கறிந்த இந்தி யொன் றிலேயே எல்லாவற்றையும் கற்க, இங்குள்ளவர்களும் அவர்ப் போலவே இந்தியைக் கற்று மதித்தல் வேண்டும் என்பது தென்னவர்க்கு எத்துணையளவு கேடு பயக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? "இவ்வடக்கு முறை யழுத்தத்தால் இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள மக்கள் தாய் மொழி, ஆங்கிலம், இந்தி ஆகிய மும்மொழிகளையும் கற்க வேண்டியுள் ளது. ஆனால் வடபால் உள்ள மக்கள் இந்தத் தொல்லையில்லாத தால் அவர்கள் இந்தியை அளவுக்குமேல் வலியுறுத்துகின்றனர். இது வருந்தத் தக்கதாகும்" என்று சென்னை மன்ற மேலவைப் பேச்சில் பர். ஏ. இலக்குமணசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளதை வடவர் மதித்தல் வேண்டும். அன்றேல் உள்நாட்டு மொழிச் சிக்கலே வெளிநாட்டு எல்லைச் சிக்கலைவிடப் பெருஞ்சிக்கலாகப் போய்விடும் என்பதை அரசினர் உணர வேண்டும்.

மொழிச் சிறப்பும், அறிவுப் பரப்பும், ஆட்சித் திறனுமற்ற இந்தியெனும் ஒரு குழந்தைப் பருவத்து மொழி தென்னகத்துக் குழந்தைகளின் வாய்களில் வலிந்து துருத்தப் பெறுமானால், அது ஒன்றே தமிழகப் பிரிவினைக்கு வழிவகுக்கக் கூடிய செயல் என்று தமிழ் மக்கள் எல்லாரும் அறிந்து கொள்வார்களாக. இதைத் தமிழ் மொழி வெறி என்று ஒரு சிலர் கூறுவார்களாயின் அவர்கள் அறியாமைக்காகவும் போலியரசியல் ஒற்றுமைக் காகவும் நகையாடுகின்றோம்.

போன்ற நாகரிகமற்ற தீவு மொழிகளும், சில மலைவாணர் மொழி களும் ஏறத்தாழ ஐம்பது முதல் மூவாயிரம் வரை சொற்கள் கொண்டவை. அவை தனி மொழிகளாயிருப்பினும் சொல்வள மின்மையாற் சிறப்பற்றவை. இக்கால நாகரிக மக்களின் உலக வழக்குப் பேச்சிற்குக் குறைந்த பக்கம் இருபதினாயிரம் சொற்கள் வேண்டும். ஆங்கில சாகசனியச் சொற்கள் (Anglo Saxon) ஏறத்தாழ இருபத்துநாலாயிரம். இற்றை யாங்கிலச் சொற்கள் ஏறத்தாழ ஐந்திலக்கம். இவற்றுள், நூற்றிற்குப் பத்தே ஆங் கிலம்; எண்பது கிரேக்க விலத்தீனம் (Greco Latin); ஏனைப் பத்து ஏனை மொழிகள். சமற்கிருதச் சொற்கள் ஏறத்தாழ ஈரிலக்கம். இவற்றுள், நூற்றிற்கிருபது தென் சொற்கள்; இருபது வட திரவிடம்; முப்பது மேலையாரியம்; இருபது புனை சொற்கள்; பத்து இடுகுறிகள். குமரிக்கண்டத் தமிழ்ச் சொற்கள் ஏறத்தாழ ஓரிலக்கம். குமரி நிலம் முழுகிய பின்பும் பண்டைத் தமிழிலக்கியம் இறந்துபட்ட பின்பும், இன்று எஞ்சி நிற்கும் உலக வழக்குச் சொற்களும் செய்யுள் வழக்குச் சொற்களும் அரையிலக்கம். இவையெல்லாம் தனித் தமிழ்.

பண்பட்ட மொழிச் சொற்கள் இலக்கக் கணக்காய் எண் ணப்பட்டிருப்பினும், அவற்றுட் பெரும்பாலன புணர் சொற் களும் தொடர்ச் சொற்களுமான கூட்டுச் சொற்களே. தனிச் சொற்கள் சில பல்லாயிரமே. அவற்றுள்ளும் வேர்ச் சொற்கள் சின்னூறே.

மொழிகள், இயன்மொழி, திரிமொழி என இருவகைப்படும். தானே தோன்றியது இயன்மொழி; ஒன்றினின்று திரிந்தது திரிமொழி. தமிழ், இந்து மாவாரியில் மூழ்கிப்போன குமரிக் கண்டத்தில் கி. மு. ஐம்பதினாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றி முழு வளர்ச்சி யடைந்திருந்த தனிமொழி. கி. மு. பத்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டுத் தோன்றிய தலைக்கழகத் திலேயே முத்தமிழிலக்கிய விலக்கணங்கள் முற்றியிருந்தன. இலக்கணத்திற்கு முற்பட்டது இலக்கியம். இலக்கியத்திற்கு முற்பட்டது மொழி. இலக்கியமும் எழுதப்பட்ட நிலைக்கு முந்தி யது எழுதப் படா நிலை. அசை நிலை, புணர் நிலை, பகு சொன் னிலை, கொளுவு நிலை என நானிலைகள் கொண்டு வளர்ந்தது

தமிழ் மொழி. இந்நானிலக்கும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் சென்றிருத்தல் வேண்டும். மாந்தன் தோற்றம் கி. மு. ஐந்திலக்கம் ஆண்டுகட்கு முற்பட்டது. சாலி (ஜாவா)த் தீவிற் கண்டெடுக்கப்பட்ட மாந்தனெலும்பு அக்காலத்தது. ஆப்பிரிக்காவில் தங்கனிக்கா நாட்டில் அண்மையிற் கண்டெடுக் கப்பட்ட மாந்தனெலும்பு, கி. மு. ஆறிலக்கம் ஆண்டுகட்கு முற்பட்டது. இவ்வீரிடங்களும் முழுகிப்போன குமரிக் கண்டத்தைச் சார்ந்தவை. பனிமலை (இமயம்) எழாது கடலுக் குள்ளிருந்தபோது, ஆத்திரேலியா, ஆப்பிரிக்கா, இந்தியா ஆகிய முக்கண்டங்களையும் ஒன்றுயிணைத்துக் கொண்டிருந்த தொன்முதுபழ நிலம் குமரிக் கண்டம்.

தமிழ் தானே தோன்றிய தென்மொழி, தொன்மொழி, முன் மொழி, மென்மொழி, வளமொழி, தாய்மொழி. உலகப் பெரு மொழிகட்குள் தூய்மை பேணக்கூடிய தனிமொழி தமிழ் ஒன்றே.

''ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்''

என்னும் தண்டியலங்காரவுரைப் பழஞ் செய்யுளைக் கண்டு உண்மை தெளிக.

காலப்போக்கில் பல வகையிற் கலப்பு ஏற்படினும் அதற் கோர் அளவுண்டு. பகுத்தறிவுள்ள மாந்தர் நல்லதைக் கொள் ளவும் அல்லதைத் தள்ளவும் வேண்டும். மேனாட்டார் பழக்க வழக்கங்களிற் பலவற்றை நாம் மேற்கொள்ளினும், மண வாழ்க் கையும் பெண்டிரொழுக்கமும் பற்றியவற்றை நாம் மேற்கொள் ளவே முடியாது. தன்மானமும் கற்பும் அதற்குப் பெருந் தடை யாய் நிற்கும். அது போன்றே மொழித்துறையிலும் தமிழின் மென்மையும் வளமும் செம்மையும் தூய்மையும் மரபும் பிற மொழிக் கலப்பை ஏற்பனவல்ல. எல்லாச் சொற்களையும் தமிழில் மொழி பெயர்க்க முடியும். பொதுச் சொற்களையெல்லாம் மொழி பெயர்த்தும், இயற் பெயர்களை (Proper Names) யெல்லாம் வரி பெயர்த்தும், தமிழின் தூய்மையைப் பேணிக்கொள்ளல் வேண்டும்.

வேறென்ன சொல்வது?

○ மொரார்சி தேசாய்க்குப் பொற்கொல்லர் கருப்புக்கொடி சாட்டினர். — செய்தி.

அவரும் ஒரு பொற்கொல்லர் தானே!

○ பாதுகாப்புக்குப் பொருள் திரட்டித்தந்த திரைப்பட நடிகைக்கு நேரு தலைமையில் பாராட்டு விருந்து. — செய்தி

திரட்டித்தந்த பணத்திலா? அரசினர் பணத்திலா? தொண்டிலுமா ஆரவாரம்?

○ அமெரிக்காவில் ஆண்டிற்கு 25000 பெயர் தற்கொலை செய்து கொள்கின்றனர். — செய்தி

அங்கு அதிலும் முன்னேற்றமே!

○ அரசியல் சட்டத்தில் வரி போடுதற்கு வரம்பு கட்டத் தவறிவிட்டனர். — இராசாசி.

எதிர்ப்புக்கு ஒரு வரம்பில்லையா?

○ கல்வியமைப்பை மீண்டும் முன்பு போலவே மாற்ற அரசு நினைக்கின்றது. — கல்வியமைச்சர்

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

○ உணவுப் பொருள்கள் வீணாவதைத் தடுத்தாலே போதும். பற்றுக் குறையே ஏற்படாது. — திரு. உமாயூன்கபீர்

அரசினர் மாளிகைகளில் விருந்துகளை ஏற்பாடு செய்பவரிடம் கூற வேண்டிய செய்தி!

(முன்பக்கத் தொடர்ச்சி.)

> "பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே."

என்னும் நன்னூல் நூற்பா (462), எல்லாத் துறையிலும் எல்லாவற்றையும் குருட்டுத் தனமாய்த் தழுவிக் கொள்ளுமாறு கூறிய நெறிமுறையன்று. தமிழ்ப் பகைவரும் தாய்மொழிப் பற்றில்லாரும் தன்னலக்காரரும், உண்மைக்கும் உத்திக்கும் ஒழுங்கிற்கும் மாறாக எதெதோ எத்தனையோ சொல்லலாம்.

> "...............நேர்நின்று
> காக்கை வெளிதென்பார் என்சொலார்? தாய்க்கொலை
> சால்புடைத் தென்பாரு முண்டு"

இதையறிந்து உண்மையுணர்க.

○ மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் எதிர்க் கட்சியினரும் உதவ வேண்டும்.
— திரு. பக்தவத்சலம்

ஆனால் கண்டுபிடிக்கப்பட்டவர்களைத் தண்டிப்பது எங்கள் விருப்பம்!

○ இந்தியா ஒரு பொழுதும் இந்து நாடாகாது —திரு. நேரு

ஒரு வேளை இந்தி நாடாகலாம்.

○ கலப்பு மணம்பற்றிச் சட்ட சபையில் சுவையான பேச்சு!
— செய்தி

பேச்சோ பேச்சு!

○ ஆங்கிலத்தின் இடத்தில் இந்தி விரைவில் கொணரப் பெறும் —இலால்பகதூர்சாத்திரி

எரிகிற வீட்டில் பிடுங்கியதெல்லாம் ஊதியந்தானே.

○ தேசீய ஒருமைப்பாட்டை வளர்ப்பவை தமிழ் நூல்கள்
— அமைச்சர் வேங்கடராமன்

பின், தமிழை நாட்டுமொழியாகச் செய்வது தானே...!

○ கூட்டுறவு அமைப்புகளில் ஊழல்; பணம் கையாடல்!
— செய்தி

இதில் மட்டும் நல்ல கூட்டுறவு இருந்திருக்கும்!

○ பழம் பெருமையை மட்டும் பேசுவதால் பயனில்லை
— திரு. பக்தவத்சலம்

"பாரத நாடு பழம் பெரு நாடு, நீரதன் மக்கள் இந் நினைவகற்றாதீர்"

○ கோடைக் காலத்தில் மலை வாழ் விடங்கட்குச் செல்பவர்கட்குப் புகை வண்டிக் கட்டணம் குறைக்கப்படும்
— செய்தி

எவர் எவர்க்கு எதை எதைக் கொடுக்க வேண்டும் என்று அறியாத அரசியல் மடத்திற்குப்பொருத்தமான எடுத்துக் காட்டு.

○ தமிழ் நாட்டில் உருக்காலை ஏற்படுமா ஏற்படாதா என்ற ஐயம் வேண்டாம். உறுதியாக ஏற்படும்.
— அமைச்சர் வேங்கடராமன்

ஆனால் எப்பொழுது என்று மட்டும் கேட்கவேண்டாம்.

○ நம் பல்கலைக் கழகங்களில் வெளி மாணவர்களுக்கு மிகுதியான வாய்ப்பு.
-திரு. சி.பி. இராமசாமிஅய்யர்

தன் பிள்ளை பட்டினி; ஊர்ப் பிள்ளைக்குக் கறியுஞ் சோறும்.

○ கென்னடி மாளிகையின் முன் ஆர்ப்பாட்டம். விலங்குகள் எல்லாவற்றுக்கும் உடையணிவிக்க வேண்டுகோள்.
— செய்தி

"விலங்குகளாகிலும் மானத்தைக் காக்கட்டும்."

"தென்மொழி" பற்றி

'தென்மொழி' பல சான்றோர்களின் சீரிய கட்டுரைகளைக் கொண்டு திகழ்கின்றது. ஆழ்ந்த துயிலிற் கிடக்கும் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி உணர்ச்சியூட்டுந் தகைமையில் தனக்குத்தானே நிகரானது. எல்லா வகையானும் சாலச் சிறந்த இதனை வரவேற்கின்றோம். செந்தமிழ் அன்பர்கள் இதனை வாங்கியும் வாங்குவித்தும் வண்பயன் எய்துவார்களாக.

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு 34 பரல் 2

தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுதற் பொருட்டே ஒரு தாளிகை தோன்றுகிறதெனின் அத்தாளிகைக் கின்றியமையாத பெருந்தகுதி மொழித் துறைத் தகுதியாகும். இத்தகுதி முற்றிலும் வாய்ந்த தனித் தமிழ்த் தாளிகை தென்மொழி..... தமிழைப் பேணி வளர்ப்பதற்காக எழுந்துள்ள இத்தாளிகையைத் தமிழர் என்று சொல்லிக் கொள்கின்ற ஒவ்வொருவரும் (உறுப்பினராகச் சேர்ந்து) வாங்கிப் போற்றுதல் வேண்டும். இது தமிழரின் முதற் கடமையாகும்......

தமிழ் முரசு
சிங்கப்பூர் 13—9—59.

மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்று, தமிழையும் உரு மாற்றம் செய்து மகிழச் சில தீய சக்திகள் தமிழகத்தில் உலவி வருகின்றன. கேடுதரும் அவற்றை வெட்டிச் சாய்த்துப் புதைக்கும் நோக்குடன் தென்மொழி வீறு கொண்டு முழக்கமிடத் தொடங்கியிருக்கின்றது...,தென்மொழியைப் பேணிக்காப்பது தமிழ் மக்களின் கடமை என்பதைத் தமிழகம் உணரவேண்டும்.

நவ இந்தியா
14—10—59.

தென்மொழியே! தேன் கருத்தே! தமிழ்ச் சர்க்கரைக் கட்டியே!...அரைகுறைப் படிப்பாளிகள், கலப்படமான தமிழ் நடையில்தான் எழுதி வருகிறார்கள் என்ற பெரும் புலவர் மனக் குறையைப் போக்க வந்த தனித்தமிழ்ப் பெட்டகம் நீ! உன் கருத்து முழுதும் தேன். ஆம்! தனித் தமிழைச் சுவைக்க விரும்புவார்க்குக் கலப்பில்லாத தனி இனிப்பு. கரடு முருடில்லாத தனித்தமிழ் கூட எழுத முடியும் என்பதற்குத் தென்மொழி ஏடு தலைசிறந்த எடுத்துக் காட்டு......

விடுதலை
21—4—60.